REGD M. 4642.

விபரம்
ரூ 7,
380

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 21–8–49 | இதழ் 8

## மாஜி கடவுள்

1.



ஜூவஸ்

## மாஜிக் கடவுள்கள்

16-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படிப்பட்ட ஆற்றலைக் காட்டிய ஜூவஸ், ஆண்டவனானான். அதற்குப் பிறகும், ஜூவஸ், அசுரர்களுடன் போர் புரியவும், தன் ஆதிக்கத்தை எதிர்த்த தேவர்களுடன் போர் புரியவும் நேரிட்டது. எல்லாவற்றிலும், ஜூவஸ் வெற்றி பெற்றான். எனவே, அவன் ஆதிக்கத்துக்கு அண்டம் அடங்கிற்று.

இத்தகு, கதைகளை, புண்ய கதைகளாக்க் கொண்டு, நெடுங்காலம் வரையில், கிரேக்கமக்கள், ஜூவஸைப் பூஜித்து வந்தனர்.

கடவுள் எனத் தொழுகிறோமே, தாய் தந்தை, பாட்டன் பாட்டி, என்று குடும்பம் கற்பிக்கிறோமே, வம்சாவளிக்குக் கதை கூறுகிறோமே, சரியா, என்று, புராணீகனும் எண்ணவில்லை, மக்களும் எண்ணவில்லை. அவ்விதமான எண்ணமே, நாத்தீகமாகக் கருதப்பட்டது.

ஒலிம்பஸ் மலையையும் அதன் மீதமர்ந்து அண்டத்தைப் பரிபாலிக்கும் தேவனையும் குறித்து, சந்தேகப்படுபவன், சண்டாளனாகக் கருதப்பட்டான். காவியங்கள் புனைந்தனர், ஜூவசின் அருமை பெருமை பற்றி! பூசைகள் ஏராளம்! மலைமலையாகக் காணிக்கைகள்! மந்தை மந்தையாக மெய்யன்பர்கள்! கோயில்கள் பிரம்மாண்டமான அளவில்! இவ்விதமான கோலாகலத்துடன் கிரேக்க மக்களின், கருத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த, ஜூவசுக்கு, இன்று, என்ன மதிப்பு தருகின்றனர், கிரேக்க மக்கள்! கடவுள், என்ற நிலையே இல்லை. கடவுள், இப்படிப்பட்ட குணமும் செயலும், கொண்டவராக இருக்கமுடியாது. குடும்பக் கலகமும் கொடிய ஆயுதம் கொண்டு கொல்வதும், ராஜ்யத்தைப் பிடிப்பதும், ரணகளத்தில் உழல்வதுமாக, இருப்பது, ஆண்டவனுக்குரிய இலட்சணமல்ல, மக்களின் மதியில் மூடுபனி மிகுந்திருந்தபோது மூண்டெழுந்த அச்சமும் ஆவலுமே, இவ்விதமான கற்பனைகள் முளைக்க இடமளித்தது. இயற்கையின் கோலாகலத்துக்கு விளக்கம் கிடைக்காத போது, பிரபஞ்ச உற்பத்திக்கு காரணம்விளங்காதபோது பாமரர் பலவிதமான, கற்பனைகளைக் காரணமாகக் கொள்ளத் தொடங்கினர். ஒலியும் ஒளியும் அவர்களுக்கு, பயத்தை மூட்டிற்று! புயலும் மழையும் அவர்களுக்குப் பீதியைத் தந்தன! உயரமான மலைகளும், விரிந்து பரந்து கிடந்த கடலும் அவர்களுக்கு ஆச்சரியமூட்டின. இந்த அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு, பல கடவுள்கள், விண்ணில் இருந்து தீரவேண்டும் என்ற எண்ணம் உதித்தது.—பயம் பிறந்தது—பக்தி உதித்தது—கடவுள்களைச் சாந்தப்படுத்தவேண்டும், சந்தோஷப்படுத்தவேண்டும், உதவி பெறவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது, பூஜாரிகளாயினர் தந்திரமிக்கோர், மக்களின் அச்சத்தையும் ஆவலையும் அடிப்படையாகக் கொண்டு, கற்பனைக் கதைகளைக் சோத்தனர், புலவர்கள்; பூஜாரிகள், இவைகளைப் புண்ய கதைகளாக்கினர்; கோயில்கள் கட்டப்பட்டன; கூட்டம் கூட்டமாகக் கடவுள்கள் அமைக்கப்பட்டனர்.

இந்த அஞ்ஞானம் தொலையவும் மெய்ஞானம் பிறக்கவும், பகுத்தறிவாளர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

இப்படி எல்லாம் இருக்க முடியுமா, என்ற எண்ணம் தோன்றிய போதே, பயத்தால் நடுநடுங்கிப் போனவர்கள், எவ்வளவு பேரோ! மெல்லியகுரலில், மெத்த வேண்டியவர்கள் என்று நம்பிக்கொண்டு, சிலரிடம் கூறி, அவர்களாலேயே, பித்தன் என்றும் பேய்ச்சித்தன் என்றும் பழிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்களோ! காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள், எத்தனைபேர்களோ! துணிந்து, பலரறியத் தமது சந்தேகத்தைக் கூறி, எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி, அதனால், சித்ரவதைக்கு ஆளானவர்கள், எவ்வளவு பேரோ!

பலிபீடத்தில் ஏராளமான இரத்தம் சிந்தப்பட்ட பிறகே, பகுத்தறிவாளரின், குரல், மக்கள் செவியில் விழவும், பாமரரின் சிந்தனையில் தெளிவு பிறக்கவும் முடிந்தது. கடவுள்கள் என்ற நிலைபெற்ற கற்பனையுடன் அறிவு, மோதுதல் செய்ய வேண்டி நேரிட்டபோது, பாமரமக்கள், கற்பனையின் பக்கம் தானே திரண்டு நிற்பர்! பாமரரின், பகையினால், வீழ்ந்தவர் போக, மிச்சமிருந்த பகுத்தறிவாளர்கள், தூக்கு மேடைக்கும் அஞ்சாது, உண்மையை உரைத்தனர்—உழைத்தனர்— வாதிட்டனர்—போரிட்டனர்—வென்றனர். ஜூவஸ், மாஜி கடவுளானார்! அறிவு வென்றது! அஞ்ஞானம் தொலைந்தது!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

திருத்தியமைப்பதென்பது ம
அரசாங்கத்தாரால் எங்கே மு
போகிறது? ஏன்—எதற்காக
தம் செய்யவேண்டும்? என்ற
ணம் மாகாண சர்க்காருக்கு
டாமல் இருக்கமுடியுமா?

மாகாண சர்க்கார்களின் வரு
வாய்க்கால்களை மத்திய சர்
தன் பக்கம் திருப்பிக் கொள்
யானால், அந்தந்த மாகாண சர்
கள் தங்கள் விருப்பத்தை ஆ
கொள்ளும் வகையெப்படி எ
முடியும்? இன்றைய நி
மாகாண சர்க்கார்களின் அதி
களைப் பறித்து, அவைகளை
கள் கைக்குள் அடக்கி வை
கொள்ளும் போக்கிலேயே இன்
இந்திய அரசாங்கம் அப்போ
கப்போது நடவடிக்கைகளை எடு
வருகிறது. ஒவ்வொரு நடவடி
யும், அந்தந்த மாகாணங்க
"சுதந்திர நிலை" மீது வீசப்
அம்புகளாகவே இருக்கின்
"நாட்டு நலன்" என்ற சொல்லை
விட்டு, மாகாண சர்க்கார்களை "
றும் பேசமுடியாதபடி செ
விட்டு" தங்கள் ஏதேச்சாதிக
பார்வையில் "ஆடும் பொம்
ளாக" மாகாணங்களைவைக்
மத்திய சர்க்கார் நடவடிக்கை
எடுத்துவருகின்றனர்!

• • •

நம்மிடம் வளம் இருக்கிற
இருந்தும் "இல்லாதவர்களா
திண்டாடுகிறோம். வடநாடு வளர்
கொண்டே போகிறது. பணச்சே
யின் மணம் அங்கு பரிமளித்
கொண்டே இருக்கிறது. அதற்
ஆதரவு "எருவை"யும் அரசா
"அவர்களுக்கு" அளித்
கொண்டே இருக்கிறது, திரைம
வில்!

நமதுநாடு, ஏற்றுமதிச் செ
நிரம்பி, புதைபொருள் செ
வழிய இருக்கிறது. இருந்தும், அ
'அவர்களின்' பணச்சோலை
பயன் அளிக்கும்படி திருப்பிவி
படுகின்றன! இதற்கு வடநாட்
பணமூட்டைகளின் சார்பில் உ
மத்திய ஆட்சி வகைசெய்கிறது!

இந்நிலை மாறுவதென்று? வ
ருந்தும் வாழவகையில்லாத நி
மாறுவதெப்போது?

சிந்திக்க வேண்டுகிறோம்,
வினை' என்றால் சினம் கொள்
தோழர்களே!

# இருந்தும்—இல்லாதவர்கள்!

மார் எமது திராவிடநாடு!"
நாம் கூறும்பொழுது பல
திராவிடத்தின் வளங்கள்
தெளிவு ஏற்படுவதில்லை.
இதுவும் ஒரு பாட்டு' என்று
கருதுகின்றனர். அது
ன்றி திராவிடநாடு பிரிந்து
வாழமுடியுமா, அதற்கு
ருக்கிறதா என்று கேள்வி
ல், கிண்டலைக் கிளப்புகின்

விடம்—சென்னைமாகாணம்—
யங்கும் பெருமை கொண்
ன்பதை, ஒருமுறை இரு
அல்ல, பலதடவைகள் எடுத்
ட்டியுள்ளோம். 'வாழ வழி
து ஆனால் வகைதான்
அந்தவகையைக் காணு
வாரீர்!' என்பதே நமது
நாடு திராவிடருக்கே என்ற
கீதத்தின் பொருள் என்
எத்துணையோ முறை
க் கூறிவந்துள்ளோம்.
நாட்டின் வாழ்வுக்கு நிலவ
வளம் தேவை—அது இருக்
ம்மிடம் பெருமிதமாக.

ாட்டின் வளர்ச்சிக்கு
வளம் தேவை—அது இல்லை
. ஆனால் அதற்கான வகை
கிகள் கொழித்துக்கிடக்கின்
ருமைப்படத் தக்கவகையில்.

உண்டு, ஆனால் வகை

இந்த நிலை என்பதன் எதி
நமது பிரிவினை முழக்க

ில் வளம் பெறுவதற்கான
பொருள்கள், ஏராளமாக
ின்றன. இரும்பு, பொன்,
எல்லாம், கிடைக்க வழி
து. இருந்தும் நம்மால்
ற முடியவில்லை! தொழில்
ளர வகையில்லை!

னம். வடநாடு 'பணத்தோட்
க ஆகிவந்தது—வருகிறது.

தொழிற்சாலைகள் வளர்ந்து விட்டன. தொழில் துறையில் அதன் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது, அஞ்சும் விதமாக அதிகரிக்கும் வடநாட்டின் தொழில் ஆதிக்கத்துக்கு வேண்டிய சலுகைகளை இந்திய சர்க்கார் வேண்டிய அளவில் அளிக்கின்றனர்.

அளிப்பதற்கான வழிகளை மத்திய சர்க்கார் "அதிகாரங்கள்" என்ற உருவில் அதிகமாக்கிக் கொண்டே வருகின்றனர்.

வடநாடு பணபலம் படைத்து விட்டது. தொழில்வளம் பெற்று விட்டது. அரசியல் ஆதிக்கம் அடைந்துவிட்டது. ஆட்சியின் கைப்பிடி "அவர்கள்" கையில் இருக்கும் காரணத்தால் ஆதிக்கவளர்ச்சியை அதிகமாக்கிக் கொண்டே வருகின்றனர்.

"ஏக இந்தியா" என்ற சொல்லை ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார், மாகாணவளங்களைத் தன் கண்காணிப்பில் வைக்கும் ஆசையைச் சாதித்து வருகிறது.

* * *

திராவிடம் —சென்னைமாகாணம் —இந்தியாவிலேயே சிறந்து விளங்கும் மூலப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகும். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில்,

மைக்கா
மாங்கனீஸ்
வேர்க்கடலை
தேயிலை,
புகையிலை,
மிருகத் தோல்கள்,

பெரும்பாலும் சென்னை மாகாணத்தில் கிடைக்கும் பொருள்களே ஆகும். இவைகளில் நம் மாகாணத்தில் கிடைக்கும் மைக்காவும், மாங்கனீசும் உலகிலேயே சிறந்தவையென்று கூறப்படுகிறது. வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முந்திரிப் பருப்புக்கு சமீபத்தில் அதிகக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் முந்திரிப் பருப்பின் அளவு வர, வர அதிகமாகிக்கொண்டே வருகிறது. எதிர்காலத்தில் இன்னும் பன்மடங்காகும் என்பதற்கான நல்ல சூழ்நிலையும் தென்படுகிறது.

இது மட்டுமல்ல, இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் வளர்வதற்கான, அதிகம் ஆவதற்கான வழிவகைகளும் தென்படுகின்றன.

பிரிட்டன் தனக்கேற்பட்டுள்ள டாலர் நெருக்கடியின் விளைவாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்துவரும் புகையிலையை நிறுத்திக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. எனவே தனக்குத் தேவையான புகையிலைப் பொருள்களை, இனி பிரிட்டன், டொமினியன் நாடுகளிலிருந்தே வரவழைத்துக் கொள்ளும்படியாக ஏற்படும். அந்நிலை ஏற்படப் போவதால் தனது புகையிலை வியாபாரத்தை மிக்வும் சிறந்த முறையில் நடத்த டொமினியன் நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்குச் சந்தர்ப்பம் ஏற்படும். இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகுமேயானால், புகையிலை உற்பத்தியில் சிறந்து நிற்கும் சென்னை மாகாணமே முன்னணியில் நின்று விளங்கும். சென்னையிலும், குன்டூர் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் புகையிலையின் தரம் உலகிலேயே மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது—வர்ஜீனியா புகையிலையை விடத் தரத்தில் உயர்ந்தது என்று மதிப்பிடப்படுகிறது! எனவே, இவ்வளவு வளம் நிரம்பியதாகத் திராவிடம் இருக்கிறது. உலகில் பெருமைப்படத்தக்க ஏற்றுமதிப் பொருள்களை உண்டாக்கும் இடமாக,

கிடைக்கமுடியாத மாங்கனீசும் மைக்காவும் கிடைக்கும் இடமாக இருக்கிறது! உலக நாடுகளின், முதல் வரிசையில் வரக்கூடிய, பெருமை பெறத்தக்கதாக இருக்கிறது!

* * *

நாட்டின் தொழில் வளம் ஓங்குவதற்கான மூலப் பொருள்கள் நம் மாகாணத்தில் நிறைந்து கிடக்கின்றன. வேண்டிய அளவு சுரங்கப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க இன்றைய ஆட்சியாளர் போதிய சிரத்தை எடுத்துக் கொள்ளாமலிருந்தும்கூட, பூமிக்கடியில் கிடைக்கும் செல்வங்கள் நம் மாகாணத்தில் ஏராளமாக இருக்கின்றன. என்பதற்கான தோற்றங்கள் தென்பட்டு வருகின்றன.

தொழில் வளம் பெருக வேண்டுமேயானல் அதற்கான மூலப் பொருள்கள் முக்கியம். ஒரு நாட்டின் செல்வம் அங்கு கிடைக்கும் இரும்பு, நிலக்கரி, முதலாய சுரங்கப் பொருள்களேயாகும். பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் இத்தாதுப் பொருள்களைக் கண்டு பிடித்து, அவைகளைத் தோண்டி எடுக்க வேண்டிய சிரத்தையும் பொறுப்பும் இருக்கவேண்டியது அந்த நாட்டு அரசாங்கத்தின் கடமையாகும். இந்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இத்துறையில் இதுவரை அவ்வளவு போதிய கவனம் செலுத்தப்படவே இல்லை—அதற்கான முக்கியத்துவமும் அவ்வளவாகக் காட்டப்படவில்லை!

இருந்தும், சில இடங்களில் பூநிலை ஆராய்ச்சியாளர் செய்த சோதனைகளிலிருந்து நம் மாகாணத்தில் நல்ல, சுரங்கப் பொருள்கள் கிடைக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. உலகிலேயே மிகச் சிறந்த, பல தொழில்களுக்குப் பயன்படக்கூடிய, பழுப்பு நிலக்கரி பெருமிதமான அளவில் தென்ஆற்காடுமாவட்டத்தில் கிடைக்கும் என்று சமீபத்தில் காணப்பட்டுள்ளது. இந்திய பூநிலை ஆராய்ச்சி டைரக்டரான டாக்டர் வெஸ்டு, தென்ஆற்காட்டில் கிடைக்கும் 'லிக்னைட்' (பழுப்பு நிலக்கரி) பொருள் பற்றி விடுத்துள்ள விபரமான அறிக்கையில் அங்கு கிடைக்கும் பொருளால் எவ்வளவு தூரம் பயனும் பலனும் பெறமுடியுமெனத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

எனவே, இதுபோன்ற புதை பொருள்களைக்கண்டுபிடிக்கும் வேலையில் இந்திய பூநிலை ஆராய்ச்சியாளர் உற்சாகத்துடன் இறங்குவார்களேயானல்—நம் மாகாணத்தின் 'சுரங்க வளம்' இன்னும் பெருக வழியேற்பட முடியும். அப்படி ஏற்படுவதற்கான வசதிகளை அளித்து பூநிலை ஆராய்ச்சி இலாகாவை உற்சாகமூட்ட வேண்டியது சர்க்காருடைய பொறுப்பாகும். அது மட்டுமின்றி நம் மாகாணத்தைப் பொறுத்தமட்டில் சென்னை—பூநிலை ஆராய்ச்சிக்கென இருக்கும் சோதனைச்சாலை (Laboratory)-யை வசதிகள் நிரம்பியதாகச் செய்யவேண்டியது மிகமிக முக்கியமாகும். தற்போதிருக்கும் சோதனைச்சாலை மிக மிகச் சிறியது. சாதாரண சோதனைகளை மட்டும் நடத்தக்கூடிய வசதிகள் உள்ளது. எனவே, நம் மாகாணத்தின் புதை பொருட் செல்வங்களைக் கண்டுபிடிப்பதற்கான, வசதிகளை பூநிலை ஆராய்ச்சியாளருக்குச் செய்து தரவேண்டிய பொறுப்பு மிகவும்முக்கியமானது—அவசியமானது. ஆனல், இந்த இலாகாவோ இந்திய சர்க்காருக்கு—மத்திய சர்க்காருக்கு — கட்டுப்பட்டதாகும்.

மாகாணத்தின் வளம், வளர்ச்சி செய்யப்பட வேண்டும் என்ற அக்கரையும் ஆர்வமும் அம்மாகாணச் சர்க்காருக்கே இருக்க முடியும். ஆனல் அந்நிலையில் மாகாணச் சர்க்கார்கள், இருக்கிறதா, இருக்கும்படி மத்திய சர்க்காரால், வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், கிடைக்கும் பதில் பரிதாபமாகவே இருக்கிறது!

ஆங்காங்கு கிடைக்கும், தாதுப் பொருள்களின் பயனை அந்தந்த மாகாணங்களே அடையவேண்டும், அப்படியிருந்தால்தான், தன் மாகாணத்தில் கிடைக்கும் தாதுப் பொருள்களைக் கொண்டு, தனக்கான பலன்களைப் பெறமுடியும், அந்த மாகாண சர்க்காரால். இதுதான் நாட்டு வளர்ச்சிக்குப் பயனூட்டுவதாக இருக்கும்.

ஆனல் நிலைமை அப்படியிருக்கிறதா?

இல்லை என்பது மட்டுமல்ல; இந்த விஷயங்களில் மத்திய சர்க்கார் தனது ஆதிக்கத்தை அதிக[...]
வருகிறது.

புது டெல்லியில் கடந்த[...]
23-ந் தேதி மாகாணப் பிரத[...]
நிதிமந்திரிகள் ஆகியோரும் [...]
லமைப்பு நகல் கமிட்டியும் அ[...]
மாநாடொன்று நடைபெற்றது[...]
போது இந்தியாவின் எந்தப்[...]
யில் இருந்தாலும் அந்தப்[...]
யிலிருக்கும் தாதுப் பொ[...]
சுரங்கங்களை மத்திய சர்க்கா[...]
கட்டிப்பாட்டுக்குள் கொ[...]
வரலாம் என்பதாக முடிவு[...]
பட்டிருக்கிறது.

இந்த முடிவு கூடாது—அ[...]
இதனல் மாகாணங்கள் பெற[...]
வருமானங்கள் பாதிக்கப்படு[...]
தாகக்கூறிச் சில மாகாணப்[...]
கள் தங்கள் அதிருப்தியைத்[...]
வித்து இந்த முடிவைஏற்கமு[...]
என்று மறுத்துள்ளனர். [...]
நாட்டின் நன்மைக்கு இந்த[...]
தான் நல்லதென்றும் இப்ப[...]
தால்தான் மேற்படி [...]
பொருள் முன்னேற்றம் பற்றி[...]
விதமான கட்டுப்பாடு ஏற்ப[...]
றும் பதில் தெரிவிக்கப்பட்[...]
றது. ஓரேவிதமானகட்டுப்பா[...]
கப்படவேண்டும் என்று கூற[...]
தன் கருத்து, மாகாணங்கள்[...]
பட்ட முறையில் வெளியு[...]
ஒப்பந்தம் எதுவும் செய்த[...]
ளாமல் இருக்கவேண்டும் எ[...]
கும். இப்படித்தனித்தமுறை[...]
பந்தங்கள் செய்யப்பட்டால்[...]
"நாட்டின் நலன்களுக்கு நாச[...]
விக்கும்" என்று கூறப்பட்[...]
முடிவை ஏற்கமறுத்தவர்களி[...]
அடைக்கப் பட்டு எந்த மாகா[...]
விருந்தாலும் அங்கு கி[...]
சுரங்கப்பொருள்கள் மத்திய[...]
ரின் கட்டுப்பாட்டுக்கே உரி[...]
பதாக முடிவுசெய்யப்பட்டு[...]

எனவே, மேற்படி சுர[...]
பற்றி அந்தந்த மாகாண [...]
களுக்கிருக்கவேண்டிய பெ[...]
யும் மத்திய அரசாங்கமே [...]
டுக்கு நன்மை" என்ற [...]
பேரில் பறித்துக்கொண்டுவி[...]

ஆகையால் மாகாண அ[...]
கள், சிரத்தைகொள்ளவோ,[...]
பெறவோ வழி யேற்படுவத[...]

இந்நிலையில் நம்மாக[...]
லுள்ள சுரங்கப் பொருள் [...]
சிச் சோதனைச் சாலையை நல[...]

(2-ம் பக்கம் பார்க்க[...]

# பாலைவனம் சோலைவனமாக!

★ ★ ★

லைவனம் சோலைவனம் ஆகிட வேண்டும் — அங்கு பைங் ா பாடிடவும் வேண்டும்!”

ஸ்டு 15. சுதந்திர நாள் விழா. இசையரசு அவர்களின் இந்தப் வானொலி மூலம் காற்றில் துவந்தபோது காதுக்குமட்டு ருத்துக்கும்சுவையூட்டுவதாக ந்து. பாலைவனம் சோலைவனம் வேண்டும்; அருமையான வறண்ட பாலையை வளங் க்கும் சோலையாக ஆக்கிட டும்! சாத்தியமற்ற செயல் அட்லாண்டிக் சமுத்திரம் ங்கி நைல் நதி பள்ளத்தாக்கு ரயில், வடஆப்பிரிக்காவில், மைல்கள் பரந்து கிடக்கும் ா பாலைவனத்தைப் பசுமை யதாக ஆக்க மேல்நாட்டு அறி ர திட்டங்கள் தீட்டிக் காட்டும் ழது, பாலையைச் சோலை ஆக்கு பகற்கனவு’ ஆகிவிடமுடியாது!

லைவனம் சோலைவனம் ஆகி, பறக்கும் பைங்கிளிகள் வும் வேண்டும்—நல்ல இலட் நாடு பாலைவனம் ஆக இருக் அது சோலைக்காடாக ஆக டும். அங்கு, தொல்லைகள் ந்து, மக்கள் குயில்களாகப்பாடி, வண்டும். பாட்டின் கருத்து ட்டத்தக்கது. மணற்காட்டை, யங்கும் தோட்டம் ஆக்கினால் க் கண்டு மகிழாதார் இரார்— ல் சிரியது என்பதால்.

லையைச் சோலையாக்குவதற்குப் , சோலைவனம் பாலைவனம் ஆக கொண்டிருந்தால்......?

நிக்க வேண்டிய கேள்வி. முடியாதகாரியத்தைச்செய்து ந்தால், எவர் இதயமும்இன்பங் ளவே செய்யும். அதற்குப் இருப்பதையே கெடுத்து, லயின் அழகை சூறுவளி ளச் செய்து, இருக்கும் மரங் வீழ, மணம் தரும் மலர்ச் கள்மறைய,பொலிவிழந்ததாகப் பூவனம் ஆனால் — ஆக்கப்பட்டால், இருந்ததும் உருப்படியாகாமல் போயிற்றே என்ற ஏக்கமும் அதன் விளைவாக எரிச்சலும் ஆத்திரமும் எழும்பும்!

இருநூறு ஆண்டுகள், தங்க ளின் பிடியிலே சிக்குண்டு, சுகபோகச் சுரண்டலுக்கு ஆளாகிக் கிடந்த, இந்திய உபகண்டத்தை விட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன், இனியும் தங்கள் எண்ணம் நிறைவேறாது, அதற்கு உலகச் சூழ்நிலையில் வகையில்லை என்று கண்டதும் “சுரண்டியது போதும், சொல்லிக்கொள்ளாமல் வெளியேறு வோம்” என்று ஆங்கிலேயர்கள் வெளியேறினர். ஆங்கில ஆதிபத்தி யம், நாட்டில் அடியெடுத்து வைத்த வகையும்,பின்ஆட்சிப்பீடம்அமர்ந்த கதையும் அவர்களின் ஆட்சி வர லாறு அறிவிக்கும்.

வியாபார ஆசையுடன் வந்த அவர்கள் விருப்பம், திசை மாறி, செங்கோலோச்சும் அளவில் சென் றது. செல்வதற்கான வகையில் அப் போது இந்தியாவின் நிலையும் இருந் தது. செங்கோல் செலுத்தும் ஆசை எழும்பவும், அதற்கான வசதிகளும் வழிகளும் இருக்கவும், அவர்கள் ஆதிபத்தியம் உருவாக வழியேற்பட லாயிற்று.

இரண்டு நூற்றாண்டுகள்! இந்தி யாவின் வரலாறும், வளர்ச்சியும் மாற்றியமைக்கப்பட்ட இரண்டு நூற் றாண்டுகள்! இந்த இருநூறு ஆண்டு களின் நிகழ்ச்சிகளை மனத்திரையில் படம் பிடித்துப் பார்த்தால், சோலை வனமும், பாலைவனமும்! பாடலைக் கவனத்தில்வைத்து நோக்கினால் பலப்பல உண்மைகள் நமக்கு விளங் கும். ஆண்டது, அந்நிய ஆதிபத்தி யம்தான், என்றாலும், அவர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன் நாடு எப்படியிருந்தது? சோலையாக இருந் ததா? அல்லது சோலை, பாலையாக மாறி வந்ததா என்பதை நாம் ஒரு சிறிது சிந்தனைக்குக் கொண்டு வர வேண்டும்—விளைவுகள் பல பாடங் களை நமக்குத் தரும் என்பதால்.

ஆங்கிலேய ஆட்சியின் பலனாக இந்தியா பல நன்மைகள் அடைந்தி ருக்கிறதென்பதை நெஞ்சில்கைவைத் துப் பார்த்தால் விளங்கும். அவர் கள் “நாட்டை அடிமை கொண் டோம்; இருக்கும் எல்லாவற்றையும் சுரண்டிக்கொண்டே போவோம்” என்ற அளவில் அவர்கள் இருக்க வில்லை.

வேலி அடைப்பு எதுவுமற்று மாடுகள் மேயவும் மந்தைகள், தேங்க வும் ஆக இருந்த தரிசுமனையைக் கண்ட ஒருவன் அதில் கிடைக்கும் புல் மட்டும் போதும் என்று கருதா மல், நான்கு புறமும் மதில்கள் எழுப்பி, மனதைக் கவரும் வண்ண மாக ஒரு சினிமாக் கொட்டகையைக் கட்டினால் எப்படி இருக்குமோ, அப்படியே நாட்டை அவர்கள் ஆக்கினார்கள். இதனால், பலன் அவர் களுக்குக் கிடைத்தது; இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. நாட்டை நல்ல முறை யில் ஆக்கியதன் விளைவாக அவர் களுக்கு “லாபம்” கிடைக்கத்தான் செய்தது. அதற்காகவே தான் அவர் கள் அந்த நல்ல காரியங்களையும் செய்திருக்கலாம். இதை நாம் மறுக்க வில்லை.

இருநூறு ஆண்டுகள் அவர்கள் ஆட்சியில் இந்தியா “ஏக இந்தியா” ஆக முடிந்தது! எத்தனையோ மைல் களுக்கப்பாலிருந்தாலும் அங்கிருந் தெல்லாம் செய்திகளைப் பெறும் வசதிகளைப் பெற்றோம். காற்றினும் கடிது சென்று தகவல் தரும் வசதி கள், நினைத்ததும் ஏறிச்சென்று பிர யாணம் செய்ய இரயில்வண்டிகள், பொருள்கள் பலஇடங்களுக்கும்தட் டுத்தடங்கலின்றிக்கிடைக்கக்கூடியசவு கரியங்கள். எல்லாம் அவர்கள் ஆட்சி யில் ஏற்பட்டவை என்பதை நாம் மறக்கக்கூடாது.

இந்த நேரத்தில், இருநூறு ஆண்டுகளுக்குமுன் நாமிருந்த நிலை

யையும் கொஞ்சம் கவனத்தில் வைக்கவேண்டும். கட்டை வண்டி ஏறி மாதம் காதமாக நாம் அப்போது போய்க்கொண்டிருந்தோம். புறாவின்கழுத்தில்கட்டிவிட்டு 'தபால்களை' அனுப்பிக்கொண்டிருந்த காலம் அது! போக்குவரத்துப் பாதைகள் புழுதிமயமாக, மரங்களடர்ந்ததாக இருந்தகாலம் அது! ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப்போகவேண்டுமேயானால் அதற்கானவசதிகள் இருக்காது; அதற்குப்பதில் சங்கடங்கள் நிறைந்து இருக்கும். நூறுமைலுக்கப்பால் வாழ்பவர் யார் என்றுகூட அறிந்திருக்க முடியாத நிலையில் இருந்தார்கள் அப்போது நம்முன்னோர். இன்றுகாலம் மாறிவந்துள்ளது. அதுமட்டுமல்ல, அதன் வேகத்தினூடே வளர்ச்சியும் ஏற்பட்டும்வந்துள்ளது. இதை நாம் மறக்கக்கூடாது! இந்த நேரத்தில் 'பாலைவனம் சோலைவனம்' பாடல்மீண்டும் ஒருமுறைநம்கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அன்று இருந்ததுபோல நாமில்லை! ஐரோப்பியநாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அத்துணை விஞ்ஞானமுடிபுகளும் இங்கும் இடம்பெற்றிருக்கின்றன.

“மனைக்கட்டிலிருக்கும் புல் மட்டும்போதும். மரக்கிளைகளைமட்டும் வெட்டிக்கொள்வோம்”என்று அவர்கள் நினைக்கவில்லை. அதற்குப் பதில் அந்த இடத்தில் நல்லதொரு சினிமாக்கொட்டகையைக் கட்டினார்கள். இடத்தை 60 ஆண்டு, 70 ஆண்டு என்ற கணக்கில் ஒருவன் குத்தகை எடுத்துகொண்டால், அந்தஇடத்தை எப்படித் தன் இலாபத்துக்குப்பயன் படுத்துகிறானோ, அதுபோல, அவர்களுக்குச் சொந்தமில்லாத இந்நாட்டில, சினிமாகொட்டகை எப்படி ஒருவனின் வருமானத்துக்கு வகை செய்யுமோ, அதுபோல் பல வசதிகளைச் செய்தார்கள். இரயில், மோட்டார், போக்குவரத்துப்பாதை, வானொலி, தபால் ஏற்பாடு, பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள், இயந்திர வசதிகள்; விஞ்ஞானக்கருவிகள்,— ஆகியவைகளை நாட்டில் பெருக்கியதில் அவர்களுக்கு லாபநோக்கு இருந்தது, அதனால்தான், இவைகளை ஆர்வத்துடன் செய்தனர், என்பதை நாம் மறுக்கவில்லை. குத்தகைக்கு எடுத்தவன் அந்த இடத்தில் சினிமாக்கொட்டகையைக்கட்டினான். அவன் எண்ணம் அதன் மூலம் இலாபம் பெறவேண்டும்என்பதுதான்!

ஆனால் இங்கு நாம்கவனிக்கவேண்டியது—குத்தகை முடிந்ததும் அவன் என்ன செய்தான்? இடத்தைக்குத்தகைக்கு வாங்கியபோது எப்படியிருந்ததோ, அப்படி ஆக்கிவிட்டு, கொட்டகையைத் தரைமட்டமாக்கிவிட்டுச் சென்றானா — இல்லை! என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டனவோ, அவைகள் இருக்கவே செய்கின்றன. ஆங்கிலேய ஆதிபத்தியம், நாட்டின் வளர்ச்சியில் காட்டிய ஊக்கம், அவர்கள் சுரண்டலின் அடிப்படையில்தான் என்றாலும், அதனால் ஏற்பட்டபயன்கள் பட்டுப்போய்விடவில்லை. அவர்கள் விட்டுச்சென்றவைகள் இருக்கின்றன. ஒன்றுமில்லாதபாலைபோல் இருந்தது இருநூறுஆண்டுகளுக்குமுன். அவர்கள் வெளியேறியபோது பாலை சோலையானதுபோலத்தான் இருந்தது! ஒன்றும் இல்லாத வறண்டதாக இல்லை. அவர்கள் காலத்தில் ஊக்குவிக்கப்பட்ட தொழிற்சாலைகள், வளர்க்கப்பட்ட வியாபாரங்கள் வாழ்வு வழிகள் அத்தனையும் இருந்தன. எல்லாம் அழிந்துவிடவில்லை; ஆங்கில அன்னிய ஆதிபத்தியத்தின் ஆட்சியால் நாட்டின் வளங்கள் அத்தனையும், 'அப்படியே' போய்விடவில்லை. பாலைவனம் ஆகிவிடவில்லை. வெறும் மணற்காடாக மாறிவிடவில்லை. அவர்கள் விட்டுப்போன வசதிகள், நன்மைகள், நலம்பெறும் வழிகள் இருந்தன-இருக்கின்றன. இருந்தும், இன்று ஆட்சியாளர்நாட்டைப் பாலைவனத்திலிருந்து சோலைவனம் ஆக்கவேண்டும் என்பதாகவே வீரமுழக்கங்கள் செய்கின்றனர் — என்னவோ, எல்லாம் பறிபோய்விட்டதாகவும், அதுமுழுவதையும் மீண்டும் புதிதாக ஆக்கவேண்டிய பெரும் பொறுப்புத் தங்கள் தலையின்மீதே கிடப்பதாகவும் பொருள்படும்படி.

ஆங்கிலேயர் வெளியேறியதும் அவர்கள் இந்தியாவில் அமைத்த “ஆட்சி இயந்திரம்” அப்படியேமாறிவிடவில்லை! அவர்களின் கீழ், எந்தெந்த இலாகாக்கள், எப்படியெப்படி இருந்தனவோ அவைகள் எல்லாம் அப்படியேதான் இருக்கின்றன. அப்போது வேலை செய்த அதே அதிகாரிகள்தான்! அதே சர்க்கார் இடங்கள்தான்!

நாட்டின் நிர்வாகத்தை ந
விக்கும் நல்லதொருதிறமைகொ
அதிகாரிகளை, சர்க்கார்சிப்பந்
நாட்டுக்கு அவர்கள் பயிற்றுவி
தந்துபோயிருக்கிறார்கள். நிர்
துறையில் நீண்டநாள் அனு
பெற்ற நல்லதொரு குழு, இ
தான் வருகிறது, ஆட்சிமாற்ற
பட்ட பின்னும். ஆங்கில ஆட்
படுமுன் இந்தகைய சிறந்த '
இயந்திரம்' இருந்ததில்லை. ஆ
அவர்கள் வெளியேறும்போது
இருக்கிறது. இருந்தும் பாலை
சோலைவனமாக ஆக்கப்படவே
என்றுதான் கூறப்படுகிறது, க
கிரஸ் ஆட்சியாளரால்!

எனவே, அந்நிய ஆதிபத்
தால் சோலையாக இருந்த நாடு
யாக ஆகிவிடவில்லை. மணம் ப
மலர்ப் பூங்காவாக விளங்க
என்று வேண்டுமானால் கூறலா

பாலையைப் போலிருந்த க
மாறி, ஆங்கிலேயர் போனபொ
சோலையைப்போல் ஆயிற்று
வழிகளில். இருந்தும் அச்சே
பைங்கிளிகள் பாடிடும் சோலை
மாறவில்லை. மாறுமா, என்பதற்
வழிகளும் தென்படவில்லை. ஆ
சுயராஜ்யம் வந்த பின் கழ
இரண்டு ஆண்டுகள் தரும் பா
சோலை, பாலையாக ஆகிக்கொ
டிருக்கிறது என்பதுதான்!
திரம் வந்து, 'சுயராஜ்ய சூரா
ஆட்சி பீடம் ஏறி, இருப
நான்கு மாதங்கள் ஆகிவிட்
இருந்தும், நாட்டில் வேதனைக்
எதிரொலிக்கிறதே தவிர, நன்
எதுவும் ஏற்படவில்லை; நலிவுநீ
வழியும் தோன்றவில்லை! நாள்
றும் நாட்டின் நிலை சீர்குலை
கொண்டேபோகிறது, பலவழி
லும், பாலைவனம்போல. இந்
போக்கு மாறிடத்தான் வேண்
பாலைவனம் சோலைவனமாக
அங்கு பறக்கும் பைங்கிளிகள்
டத்தான்வேண்டும். ஆகுமா,
போதுள்ள நிலை நீடித்தால்?

## ஏஜண்டுத் தோழர்களு

“திராவிட நாடு” அதிகம் கா
கள் தேவைப்படுவோர், பிரதி
மும் புதன்கிழமைக்குள் தெரி
கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

# ஜாரின் மதமும் ★ ★ மாஸ்கோ மணமும்

ஸ்கோ செல்கிறார், சர். ராதா
ணன்
த்திரம், என்று உலகு கருது
இதனை.

ஞான நாட்டுக்கு, வேதஞான
ர் தூது போகிறார்! ஏன்?
ானத்தின் பெருமையை
து வருவதற்கா? அல்லது
ானத்தின்அருமையை அங்கு
க் கூறுவதற்கா? பாடம் கற்
ாகிறாரா? உபதேசம் செய்யப்
றாரா? என்ற பல, கேள்விகள்,
ாக எழத்தானே செய்யும்,
தா கிருஷ்ணன், மாஸ்கோ
ார் என்றால்.

பக்கம் திரும்பினாலும் கோபுர
ம் கிடைக்கக் கூடிய நாட்டிலி
கிளம்பி, எங்கு திரும்பினா
தொழிற்சாலைகளின் பிரம்
மான புகைக் கூண்டுகள்
ம் நாட்டுக்குப் போகிறார்!

தீக ஒலி சதா, கேட்டுக்
டிருக்கும் நாட்டிலிருந்து
, எப்போதும், தொழிற்சாலை
இருந்து கிளம்பும் ஒலி
வண்ணமிருக்கும் நாட்டுக்குச்
றார்.

க்குச் சவாரியும் பாத
கை தருவதும், பஞ்சாமிர்த
கமும், பல்லாண்டு பாடுவ
ன்றும் நடைபெறும் நாட்டி
கிளம்பி, பாட்டாளிகள்
செலுத்தும் சோவியத் நாட்
போகிறார்.

பிரான்கள் அங்கு இல்லை!
சத்தம் கேட்காது! திருவா
திருநாளோ, தீர்த்தயாத்
மகிமையோ, அங்கு கிடை
'தெண்டனிட்டேன் என்று
டி, என் தேவனை நான், நித்
தெண்டனிட்டேன் என்று
டி!' என்று பாடி ஆடும்
கிடையாது; தைப்பூசம்
ாது!

வகளும் இன்னோரன்ன பிற

வும் உள்ள நாட்டிலிருந்து கிளம்பி, அங்கு செல்கிறார்—மத ஆதிக்கக் காரர்களை ஒழித்து, மூடபக்தியை முறியடித்து, பரலோக நினைப்பை ஒழித்து, பாட்டாளியின் தளையை நீக்கி, இல்லாமை, போதாமை, எனும் இடர்பாடுகளைக் களைந்தெறிந்து, சுகராஜ்யம் நடாத்தும், சோவியத்துக்கு, 'ராமராஜ்யம்' என்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் நாட்டிலிருந்து வேத வேதாந்த சிரோமணி எனும் விருது பெற்ற, சர். ராதாகிருஷ்ணன் போகிறார்.

இந்த அதிசயத்தைக் கண்டு பலர், பலவிதமாக எண்ணிடத்தானே செய்வர்.

அவருக்கே, சந்தேகம், ஆச்சரியம் இருக்கத்தான் செய்யும்—நம்மை எதற்காக நேரு சர்க்கார், அங்கு அனுப்புகிறார்கள்!—என்று.

போகிறார்! போகுமுன் புது டில்லியில், மாணவர் கூட்டமொன்றில் பேசியிருக்கிறார், — வேதாந்தி, பொது உடைமை நாட்டுக்கு, 'தூது வராக'ப் போவது பற்றிச் சிலபலருக்கு ஏற்பட்ட, சந்தேகத்தைப் பற்றி, ஒரு விளக்கம் தந்திருக்கிறார். போகிறநாட்டுப் பகையும் கூடாது-அனுப்புகிறநாட்டுக்கும் கோபம் ஏற்படக்கூடாது, என்ற போக்கிலே பேசியிருக்கிறார்.

சோவியத் நாட்டைப் பற்றி இங்குள்ள 'பஜனை மனத்தினர்' கொண்டுள்ள எணணத்தையும் ஒரு தட்டு தட்டிவைக்கிறார்.

இங்குள்ள மதத்துக்கும் கொஞ்சம் வக்கீல்வேலை செய்து பார்க்கிறார்.

"நண்பர், நான் நாஸ்திக நாட்டுக்கு ஸ்தானீகராகப்போக இருப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால் ரஷ்யர்கள் தாங்கள் விஞ்ஞானரீதியில் உண்மையை அறியவும் கடைப்பிடிக்கவும் முயற்சிப்பதாகக் கூறுவதை நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள் மதத்தை அழித்துத் தரைமட்டமாக்கியது உண்மைதான். ஆனால் பட்டினியால் துடிதுடித்த மக்களுக்கு சோறிட முடியாத ஜாரின் மதத்தையே அவர்கள் நிர்மூலமாக்கினர். அத்தகைய கொடிய மதத்தை நாமும் வெறுக்கிறோம்."

என்று பேசியிருக்கிறார். சோவியத்தின் விஞ்ஞான அறிவுப் போக்குக்கு ஒருபாராட்டுரை; அங்கு மதத்தை அழித்ததற்கு ஒரு விளக்கம்; அதேபோது, இங்குள்ள மதத்தை சாதாரணமானதுஎன்றோ, ரஷியாவில் ஜார்காலத்தில்இருந்தது போன்ற மதம் என்றோ கருத முடியாது என்று கூறி, இந்து மதத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது, ஆகிய இவ்வளவும் செய்து பார்ப்பதுடன், கொடுமை செய்து வந்த மதத்தை ரஷியாவில் அழித்துவிட்டார்கள், நாங்களோ, மதத்தை அழிக்கமாட்டோம் அதிலே, மடைமைகள், கொடுமைகள் புகுந்து விட்டால், அவைகளை நீக்கி, மதத்தைப் புதுப்பிப்போம்; புரட்சிகரமானதாக்குவோம், என்று ஒரு, 'கித்தாப்புப் பேச்சு'ம் பேசிப் பார்க்கிறார்.

அலுவலுக்கு ஏற்றபேச்சு! ஆனால் கவைக்கு உதவுமா, காரியத்துக்குப் பயன்படுமா, என்பதுதான் கேள்வி.

ரஷியா நாட்டிலே, மதத்தை அழிக்கவேண்டிய அளவுக்கு, ஆத்திரம், கொதிப்பு, மூண்டுகிடந்தது, ஜாரின் காலத்து மதம், அவ்வளவு அருவருக்கத்தக்கதாக, மக்களுக்குத் துளியும் பயன்படாததாக இருந்தது, ஆகவேதான் அதை அழித்தனர்—அப்படிப்பட்ட அக்ரமமான மதத்தை யாருந்தான் அழிக்கத் துணிவார்கள்—நாமும்தான் அத்தகைய மதத்தை வெறுக்கிறோம், என்று பேசும் ராதாகிருஷ்ணன், அந்தப்பேச்சின் மூலம், இந்நாட்டிலே உள்ள மதம் ஜார்காலத்து மதம் போன்றதல்ல, எனவே, இதை

(9-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 21—8—49 [காஞ்சி

## கழக நிலை

✻

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் கழகம் ஆடாது, அசையாது இருக்கிறது.

பெரியாரின் திருமணம் கட்சிப் பெருமையின் மீது வீசப்பட்ட ஈட்டி. இயக்கத்தின் மாண்பு அதன் தலைவரின் தகாச் செயலால் தரை மட்டமாகிவிடும். 'உரத்த குரல் எடுத்து ஊரெல்லாம் சுற்றினாலும்' தலைவர் போக்கால் ஏற்பட்ட கண்ணியக் குறைவை, காப்பாற்றி விட முடியாது. போற்றிப்பரப்பி வந்த இலட்சியங்களை மண்ணில் வீசும் அளவுக்குத் தலைவரின் சுயநலம் கொண்டுபோய்விட்டுவிட்டது. இனி அவரின் கீழிருந்து தொண்டாற்றுதலால் பயன் இல்லை, உழைத்து நாம் சிந்தும் வியர்வைத்துளிகள் அவரது "சொந்த" வயலுக்கு நாம் பாய்ச்சிய தண்ணீராகவே ஆகும் என்று கருதி அவரது தலைமை கூடாது; அது மாறும்வரை கழகப்பணிகளிலிருந்து விலகி நிற்கிறோம் என்பதாக எண்ணற்ற கழகங்களும், தோழர்களும், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தி ஒதுங்கி நிற்கின்றனர்.

கட்சியின்நரம்பும், சதையும்ஆடாமல் போகவே அதன் வேலைகள் அத்தனையும் அப்படியே "ஸ்தம்பித்து" நிற்கின்றன.

"நானே தலைவனாய், எழுத்தாளனாய், பேச்சாளனாய்........" என்று தான் ஒருவரால் மட்டுமே இயக்கம் வளர்வதாகப் பெரியார் இதுவரை கூறிவந்தார், அவரது மதிப்பைக் காலிழந்தும், கண்ணிழந்தும், பொருளிழந்தும் தியாகத் தழும்புகளைப் பெற்ற தொண்டர்கள் பெற்றதில்லை. 'கட்சியின் வளர்ச்சி தன்னால் தான்' என்று சொல்லி வந்தாரே தவிர 'உண்மையாகவே, யாரால்?' என்பதை அவருடைய உள்ளம் உரைத்தது கிடையாது.

கழகத் தொண்டர்களைத் தலைவர் பாராட்டியதில்லையென்பது மட்டுமல்ல; அவரது மிரட்டலுக்கு ஆடும்படியும் வைத்து வந்தார். தொண்டு என்றால் என்ன? தனிப்பட்ட ஒரு தொண்டரின் சேவையால் கட்சிக்கு ஏற்படும் பயன் என்ன? இயக்க வளர்ச்சி தொண்டர்கள் சேவையின் கூட்டுப்பலன்தான்! என்ற கேள்விகளைக் கழகப் பணிபுரிந்தோர் இது வரை எண்ணியது கிடையாது.

தலைவர் பெருமையைத் துதி பாடுவதில், கண்ணேக்கு இருந்த காரணத்தால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொண்டின் தரத்தைப் சிந்தித்துப் பார்த்தது கூட இல்லை.

ஆனால், இன்று அந்த உண்மை வெள்ளிடை மலையாகிவிட்டது! கழகத்தைச் சார்ந்த உழைப்புச் சக்தி எங்கு இருக்கிறது என்பது விளங்கி விட்டது. கழகம் வளரத் தொண்டர்களின் சேவையே அதி முக்கியமானது என்று தெளிவாகிவிட்டது. ஒரு கட்சியின் நரம்பு, இரத்தம், சதை எல்லாம் தொண்டர்கள்தான் என்பதை யாவரும் அறியும்படி ஏற்பட்டுவிட்டது.

இரண்டுமாத காலமாகக் கட்சிப் பணி "நின்று" இருப்பது கண்டு கட்சி வளர்ச்சியில் அல்லும் பகலும் உழைத்த தோழர்கள் மத்தியில் 'இப்படியா இருப்பது?' என்ற எண்ணமும், கழக வளர்ச்சியில் ஈடுபட்டிருப் போருக்கு 'இந்நிலை கூடாதே' என்ற ஏக்கமும், துடி துடிப்புக் கொண்ட தோழர்களுக்கு, 'இரண்டிலொன்று பார்த்தாக வேண்டும்' என்ற ஆசையும் பிறந்திருக்கிறது—பலர் நமக்கு எழுதியுள்ள கடிதங்கள் இதைக் கூறுகின்றன. இந்த ஆசையும், ஆர்வமும், வேகமும் உண்மையில் கழக வளர்ச்சியில் கருத்தைச் செலுத்தியவர்களுக்கு எழும்புவது இயற்கை. இந்த எண்ணம் உண்மையில் பாராட்டக் கூடியதே.

இரண்டுமாதங்களாகக்கழகப்பணிகள் நடைபெறவில்லை. இந்த "அசையாத நிலை' தொண்டர்கள் சேவையின் பெருமையை விளக்கியுள்ளது. தொண்டர்கள்தான் கட்சியின் மூல நாடி; அவர்கள் அசைந்தால்தான் இயக்கம் இயங்கும்என்பது தெரிந்து விட்டது.

தன்னலமற்ற கொள்கை வீரர்களின் மா பெரும் சக்தி கழகப்பணிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதால் போல எந்தக் காரியங்களும் பெறவில்லை; கட்சித்தொண்டு சாரம் எதுவும் நடக்கவில்லை

இந்த அசையா நிலை, தலை திடுக்கிடச் செய்திருக்கவே அவர் சுயநலம் இல்லாதவராய் திருந்தால். 'புயல் என வீசிக் டிருந்த கழகப்பணிகள், இப் அசைவற்று கிடப்பது?' பதறியிருக்கவேண்டும், பத பெரிதெனக் கருதாதவராக ருந்தால்.

மாபெரும் சக்தி, தன்னை வில்லை, தன் தலைமையை தள்ளுகிறது, தன் மீது ருந்த நம்பிக்கையை இழ டது, என்று உணர்ந்த பின் 'கழகத்தலைமை' என்கிற நா விருந்து இறங்கியிருக்கவே தாளுகவே. அதுதான் முறை னதுங் கூட. அப்படிச் செ தால் நாணயம் உள்ளவ பாராட்டுக் கூட கிடைத்திரு

அப்படி நடந்ததா என்ற வர் தன் பீடமே பெரிது கருதுகிறாரே ஒழிய, சுயம யைப் பற்றி நினைத்தவராகத் படவில்லை!

கட்சியே தன்னை விரும் யென்று, விளங்கியும் கூட "விளக்கம்" உரைப்பதில் றுரே தவிர, "தலைமைப் பெ யில் ஆர்வத்தையும் ஆசை பதித்திருக்கிறாரே தவிர, கட வேண்டும் அதன் செயல்கள் பெறவேண்டும் என்று வில்லை!

"தலைவர் தாளுகவே யிருக்கவேண்டும்"

"விளக்கங்களைப் பெ படுத்தவேண்டாம்; விலக்குவோம்!"

"கழக இலட்சியங்களை பெரும் பான்மையான நா பணியைச் செய்வதில் ஈ வேண்டும்"

இவை, கழக வளர்ச்சியில் அ கொண்ட நம் தோழர்கள் எழுதிவரும் கடிதங்கள் தரும் துக்கள்.

ஒவ்வொருவர் எண்ணத் ஊர்ந்து கவனித்தே வருகி கழக வளர்ச்சி தடைப்படக்

விடிவெள்ளி எழும்பவேண்டும் என்ற தோழர்கள் ஆர்வம் நம் இதயத்திலும் எதிரொலிக்கிறது. தலைவர், கட்சி வளர்ச்சியைப் பெரிதெனக் கொண்டிருந்தால், கண்ணியமாக, விலகிக்கொண்டிருந்திருப்பார். ஆனல், அவரது "இலட்சியம்" இயக்கத்தைப்பற்றி, அதன்வளர்ச்சியைப் பற்றி இருப்பதாகத் தெரியவில்லை. 'ஏதோ, பார்ப்போம்!' என்ற விதண்டாவாத எண்ணமே அவரது போக்கில் தென்படுகிறது. எனவே, அவராக விலகுவார் என நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆகவே மேற்கொண்டு கழக ஆக்கத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும். இதில் இன்னும் நாள் ஓட்டக்கூடாது. நல்லதொரு முடிவு கண்டு நம் நாட்டுப் பணி மீண்டும், முன்போல, முகிழ்க்க-வேண்டும்.

இதற்கான முடிவுகள் இன்னும் ஓரிருவாரத்தில் செய்யப்பட்டாக வேண்டும்—அதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிடும் என்று நம்புகிறோம். கழக நிலே, இதுபோல் நீடிக்க இடம் ஏற்படாது. விரைவில் வெள்ளி முளைக்கும்! வேதனையும், விம்முதலும் நீங்கி, வெற்றிப் பாதையில் நடப்போம்.

●

## ஜாரின் மதமும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

அழிக்கத் தேவையில்லை, என்று வாதாடுகிருர்.

ஜார் காலத்து மதம் கொடுமை நிரம்பியது, எனவேதான் அதனை ரஷியர்கள் அழித்தனர்—அழித்தது முறைதான், என்ற அளவாவது, ஒப்புக்கொள்கிருரே, அது வரையிலே, ஒரு புரட்சிதான்—அவருடைய மனப் போக்கைப் பொறுத்த வரையில்.

இந்த அளவுக்கும் பேசவிரும்பாத, புனிதர்கள் உண்டு, இங்கும் சரி, மேனுட்டிலும் சரி.

மதத்தை அழித்தது மாபாதகம் என்று சபித்திடும் மாண்பினரும் உண்டு.

ராதாகிருஷ்ணன், மாஸ்கோ போகவேண்டியவர்—எனவே, ரஷியாவில் முன்பு மதத்தை அழித்தனர், அது மகாபாதகம், என்று பேசமுடியாதல்லவா! வேதாந்தம், வேறு எதைக் கற்றுத் தராவிட்டாலும், யூகத்தைக் கூடவா, கற்றுக் கொடுக்காது, எனவே, யூகமாகப் பேசினர்.

ஜாரின் காலத்து மதம்! அழிக்கப்படவேண்டிய நிலையிலும் தன்மையிலும் இருந்த மதம்!! அழிந்த மதம்!—சரி—இந்தப்பேச்சிலிருந்து ரஷியாவில் ஜார் காலத்து மதத்தை அழித்ததில் தவறு இல்லை என்பது மட்டுமல்ல, அவ்விதமான மதம், எங்குஇருப்பினும், எப்போது இருப்பினும், அழிப்பது, தவறல்ல, என்பதும்தான், பொருளாகக் கொள்ளப்படும்.

ஜாரின் காலத்து மதம் எப்படி இருந்தது! ஆத்திகராம் ராதாகிருஷ்ணனே, அந்த மதம், அழிக்கப்பட்டதில், தவறு இல்லை என்று கூறி இருக்கிருரல்லவா! எனவே, அது எவ்விதம் இருந்தது என்பதைப் பார்ப்பது, அவசியமல்லவா?

ஜார் காலத்து மதம்! என்ன இருந்தது!

மன்னன் அரண்மனையில்--மடாதிபதி, மற்ருேர் அரண்மனையில்.

மன்னனுக்கு மடாதிபதியின் அருள் தேவை— மடாதிபதிக்கு மன்னனின் பாதுகாப்பு தேவை. இருவருக்கும் மக்களுடைய பணமும் பக்தியும் தேவை.

மன்னன் மடாதிபதியை ஆண்டவனின் பிரதிநிதி, என்பான். மடாதிபதி, மன்னனை, ஆண்டவனின் ஆணையால் அரசனுனேன் என்பான். இருவரிடமும், மக்கள், பயபக்தி விசுவாசம் காட்டியாகவேண்டும்—இல்லையேல், பாபாத்மாக்களாகிவிடுவர்.

மன்னன் பவனி வருவான், போக போக்கியத்தில் புரள்வான் மக்கள், கண்டு களிக்கவேண்டும்—களிப்பு வரவில்லை என்ருலும், நடித்தாக வேண்டும்.

மடாதிபதி பவனி வருவான், மக்கள், அந்தக் கோலாகலக் காட்சியையும் கண்டு களித்தாக வேண்டும்.

சீமான்கள், மாளிகைகளில் இருப்பர்—அவர்களுக்கு ஆசி கூறிக் கொண்டும், அரசவையிலே அவர்களுக்கு, தகுந்த இடம் கிடைப்பதற்கான, மந்திரம்ஜெபித்துக்கொண்டும், சாதுசன்யாசிகள்—மந்திரவாதிகள், மகிமை பெற்ருேர், இருப்பர்.

மக்களின் பஞ்சம், நோய், இவைகளைப் போக்க, மந்திரவாதிகள் உண்டு—சாமியாடிகள் உண்டு. பஞ்சமும் நோயும் போகிறதோ இல்லையோ, பஞ்சத்திலும் நோயிலும் உழலும்போது கூட, இந்த மந்திரவாதிகளை அணுகியாகவேண்டும்—இல்லையானல், பாபிகள் ஆகிவிடுவோம், என்ற பயம் பாமரரிடம் இருந்தது.

வயலிலே, ஜெபநீர் தெளிப்பர்.

கர்ப்பவதிக்கு, மந்திரத்தண்ணீர் தருவர்.

ஆயுதங்களின் மீது அற்புத மூலிகை தடவுவர்.

திருமணத்தின்போது பிரத்தியேக ஆசி அருளுவர்.

முக்கியமான கடிதத்தை, அருள் தரும் கரத்தால், தொட்டுத் தருவர்—அதனல் காரியம் சித்தியாகும்.

அந்தச்சீமானுக்கு, எப்படி ஜாரின் நட்பு கிடைத்தது?—என்று ஒருவர் கேட்பார்.

"அது அந்த குருவின் கடாட்சம்" என்று பதில் வரும்.

குரு, பார்க்கக் கோரமாய், கனய், குரூர மனத்தினனய் இருப்பான்.

அவன் அருள் பெற்றவன்! ஆசி, வாழ்வளிக்கும்—கோபம், அழிவைத் தரும், என்று பேசுவர், மாளிகை, குடிசை, எங்கும்.

வயல்கள் வறண்டுவிடும், மக்கள் வாழ்வு கருகும்—எனினும், பட்டாளம் பவனிவரும், பட்டத்தரசன் விழாவில் கலந்துகொள்வான், பக்கம் நின்று ஆசி கூறுவான் மதகுரு.

தேரும் திருவிழாவும் நடைபெறும், மதகுருமார்களின் ஏற்பாட்டின்படி.

விருந்தும் கேளிக்கையும் நடைபெறும், ஜாரின் விருப்பப்படி.

உச்சியில், இருந்தனர் இருவர்

ஜார்—ரஸ்புடீன் மன்னன், மதகுரு.

அடுத்தபடியில் இருந்தனர்,
சீமான்கள்—சாமியாடிகள்

அடுத்தபடியில் அழுந்திக் கிடந்தனர், மக்கள்—பகல்பட்டினி பஞ்சைபராரி—பாட்டாளி—இவர்கள்.

இவர்களின் மனமோமா, மூடநம்பிக்கைச் சேறு படிந்த குட்டை!

அஞ்சி அஞ்சிச்சாவார், இவர் அஞ்சாத பொருள் இல்லை, அவனியிலே, என்ற நிலை.

எதற்கும், அருள் பெற்றவரை நாடும், வழக்கம்; அடிதொழும் வாடிக்கை; என்ன சாபம் வந்துவிடுமோ என்ற அச்சம், நரகப்படுகுழியில் வீழ்ந்துவிடுவோமோ, என்ற பயம்.

அந்த மக்களுக்கு, ஜடைவளர்த்தவனெல்லாம், தேவதூதன்—முணு முணுப்பவனெல்லாம்வேதமோதி—உருட்டுக்கண்ணனெல்லாம், மந்திரவாதியாகத் தென்படுவர்.

ஜார்காலத்து மதம் இது! சீமானும் சாமியாடியும்சேர்ந்து மக்களின் மனதைச் சூறையாடிய கொடுமை, மதம், அங்கு.

மக்களின் மதியோ! விதவிதமான பூஜை! வேளைக்கொரு மந்திரம்! நாளுக்கோர், விரதம்! தீர்த்தமகிமை தலயாத்திரை, —இவைகளிலே விசேஷமான நம்பிக்கை.

இவ்விதமான மதந்தான் மக்களை மடமையிலும், கொடுமையிலும் ஆழ்த்திவைத்து, ஒரு சிலரை உல்லாசிகளாய், மமதையாளர்களாக்கி வைத்த, மதந்தான் அழிக்கப்பட்டது, ஜாரின் காலத்தில்,ரஷியாவில்.

அறிவுக்குத் தெளிவோ, வாழ்க்கைக்கு வளமோ, தரமுடியாத நிலையில், அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு, மக்களை ஆட்டுமந்தைகளாக்கி வைத்து, ஒநாய்களைக் குருமார்களாக்கி வைத்திருந்த மதம். அது ஒழிக்கப்பட்டது. ஒழிக்கப்பட்டதிலே, தவறில்லை, என்று, கூறுகிறார், ராதாகிருஷ்ணன்.

எந்த மதம், மக்களைக் காப்பாற்றவும் அவர்களின் கருத்தைத்தெளிவுபடுத்தவும், பயன்படவில்லையோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்தமதம்,வஞ்சகர்களைகுருமார்களாக்கி, ஏமாளிகளை அவர்களுக்கு இரையாகும்படிச் செய்து வைக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்த மதம் விவரிக்க முடியாத பயத்தை மக்கள் மனதிலே, சதா மூட்டிவைக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்த மதத்திலே, ரஸ்புடீன்கள், கிளம்பி ஆதிக்கம் செலுத்த முடிகிறதோ, அந்த மதம், அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

மூடநம்பிக்கைகளை மூலதனமாகக் கொண்டு, நயவஞ்சகர்கள் மக்களின் வாழ்வை நாசமாக்கும் விபரீத வியாபாரம் செய்வதற்கு எந்த மதம் இடமளிக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்—அழியத்தான் வேண்டும்.

அறிஞர்மன்றத்திலே, 'சர். ராதாகிருஷ்ணன், கூறிவிட்டார்.

ஏன் சொன்னர் இதுபோல், என்பது கிடக்கட்டும்—அவர், சொன்ன முறைப்படி, ஆராயும்போது, இங்கு இன்றுள்ள மதத்தைப்பற்றி, என்ன கருத்து தோன்றும், இயற்கையாய்! அதுதான் முக்கியம்.

பாம்பு படமெடுத்தாடும்—பல்லில் விஷமிருக்கும்—கடித்தால், ஆள், சாவான்—என்று கூறியான பிறகு, அதோ, ஏதோ மூலையில் பளபளப்பாகத் தெரிகிறதே, அது என்ன? படம் எடுக்கிறதே, பாம்பு தானே!—என்ற அறிவு வரத்தானே செய்யும்; அதேபோது, "ஐய்யோ! அம்மா! அது தீண்டியதால், தாங்கமுடியாத வலி உடலெங்கும்" என்று கதறியபடி ஒருவன் வந்தால், தீர்மானித்துவிட வேண்டியதுதானே, பாம்பு, விஷப் பல்லால் கடித்து விட்டது' என்று.

பாம்பைக் கொல்வது பாபமல்ல!—என்பதுபோல, ஜாரின் காலத்து மதத்தை அழித்தது, தவறல்ல, என்று சர். ராதாகிருஷ்ணன் கூறிவிட்டார். சரி. இங்கு என்ன நிலைமை? யோசிக்கத்தானே வேண்டும்.

* * *

"தாயே, தயாபரி! எனக்கு ஒரு வரம் தரவேண்டும் — என் கலிதீர ஒரு குழந்தை, அருள வேண்டும்.

இந்தப்பாபிக்கு அந்த வரம் தருவாயானல், மாதாவே! என்னவிதமான காணிக்கை வேண்டுமானாலும் செலுத்துகிறேன்."

வீட்டிலிருந்து, ஆலயம் வரை, தரையில் உருண்டுவருகிறேன், உன் நாமத்தைப் பஜித்துக்கொண்டு. உபவாசம் இருக்கிறேன், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்.

"தங்கத்தால் நாகம் செய்து சமர்ப்பிக்கிறேன்."

"ஒவ்வொருநாளும் பத்துபண்டாரங்களுக்குச் சோறு போடுகிறேன்."

"அவர்கள் உண்டதில், சிதறும் எச்சலை, பகவத் பிரசாதம் என்று எண்ணிப் பயபக்தியுடன் சாப்பிடுகிறேன்.

"எப்படிப்பட்ட கடுமையானவிரதமும் இருக்கிறேன், அம்மா! எனக்கோர் மகவு வேண்டும்!ஒருகுழந்தை தாரும் தருமசொரூபீ! என்னைத் தாயாக்கு! குழந்தை,ஒன்று, அருள்! கோடி கோடி நமஸ்காரம் உனக்கு.'

* *

பிள்ளைபேறு வேண்டி, அம்பிகையை இவ்வாறெல்லாம், வேண்டிக் கொள்வதும், பின்னர், குழந்தை பிறந்தால், அதுபோலவே செய்வதும், உண்டல்லவா!

* * *

ஒரு அம்மையார், சகலரையும் மிஞ்சிவிட்டார்கள், இந்தவிஷயத்தில்.கங்காதேவியை வேண்டினாராம், ஒருகுழந்தை தரவேண்டும் என்று. துவக்கத்திலே, என்னென்ன கூறித் துதித்தாரோ, தெரியவில்லை—அலுத்துப்போய் கடைசியாக, "கங்காமாதாவே! ஒருகுழந்தை, தா!என் மனம் மகிழ, ஒருமகவு பிறந்திடச் செய்! நான், அதே மகவை, உனக்கே பலியாகத் தந்துவிடுகிறேன்! என் குழந்தை பிறந்ததும், அன்புடன், வாரிஎடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு, செல்வமே! கலிதீர்த்த கற்பகமே! கண்ணின்மணியே! என்று கொஞ்சுவேன் — மனங்குளிர! மாதாவே! உன்னையும் மறவேன்! நீதந்த செல்வத்தை, குழந்தையை, உனக்கேஅர்ப்பணித்துவிடுகிறேன்!" என்று வேண்டிக்கொண்டு, குழந்தை பிறந்ததும், அதுபோலவே. குழந்தையைக்கொண்டுபோய், கங்காமாதாவுக்குக் காணிக்கை தருவதாகக் கூறி, கங்கை ஆற்றில் எறிந்திடவும் அந்த மாது, துணிந்ததாக—செய்தியொன்று, பத்திரிகைகளில், ஓரிரு திங்களுக்குமுன்பு தான், வெளிவந்தது.

அத்தகைய, மூடபக்தி, இருந்திடும் நாட்களில்தான் நாம் வாழ்கிறோம்.

* * *

புதையலைக்காத்துக்கிடக்கும்பூதத்தைச்சாந்தப்படுத்தி, புதையலை அடைவதற்காக, நரபலி தருவது, என்ற காட்டுமிராண்டித்தனமான, மூடநம்பிக்கை, இன்றும் இருக்கிறது — சிற்சில்சமயத்தில் சட்டத்தின் கண்ணிலே, இத்தகைய சம்பவம் தென்பட்டுவிடுவதால், வழக்குகள் நடைபெறுகின்றன. மூடநம்பிக்கை முறியடிக்கப்படவில்லை, அடியோடு. பத்திரிகைகளில் அடிக்கடி, இவ்விதமான, கோரக்கொடுமைகள், நாட்டிலே நடைபெறும், செய்திகள், வெளிவரத்தான் செய்கின்றன.

*  *  *

அனுமத் உபவாசி ஒருவன்—ஏதோ ஓர்நாளில், அவன் உள்ளத்தில் அனுமார் புகுந்துகொள்வாராம்—அன்று அவன் ஆடுவானும், ராமநாமத்தைப் பாடுவானும், அருகே இருப்போரை அடிப்பானும், கடிப்பானும், அந்த 'அடியும், கடியும்' அருள் என்று நம்பி, பக்தர்கூட்டம் அவன்அடி தொழுவராம்! வாழைப் பழத்தைச் சீப்பு, சீப்பாக, வாங்கி வைத்துக்கொண்டு, எதிரே நிற்பராம் பக்தர்கள்—"ராமதூதா! பழம் சாப்பிடு. இலங்காதகனா! பழம் சாப்பிடு" என்று பக்தி விசுவாசத்துடன், வேண்டுவராம். அனுமத் உபாசி, பழத்தைப்பெற்று பாதியோ, சிறிதளவோ, தின்றுவிட்டு, மிச்சத்தைக் கீழே துப்புவானும்—அந்த எச்சல், "பகவத்பிரசாதம்" என்று நம்பப்பட்டு, பக்தர்கள் போட்டியிட்டுக்கொண்டு, அதை எடுத்துத் தின்பராம் — தீராதநோய் போகுமாம், குடும்பம் வளருமாம்!! இபபடிப் பட்ட 'இழிசெயல்' இன்றும், மூடநம்பிக்கையின் பயனாக நாட்டிலே, நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

*  *  *

நாகரிகச் சென்னைக்கு அருகே உள்ள, பெரியபாளையத்தில், மோட்டாரில் வந்து இறங்கும் சீமாட்டிகள், பட்டு பட்டாடையைக்களைந்துவிட்டு, வேப்பஇலையைத் தொடுத்து ஆடையாகக் கட்டிக்கொண்டு, கோயிலை வலம்வந்து, வரம்கோரும், மடைமை, நடைபெறுகிறதே!! மூடநம்பிக்கை சாகமறுக்கிறதே!!

*  *

அவன் உருவம், அவலட்சணம்! உடலில் ஆயிரம்வித வியாதிகள்! எழுதப்படிக்கத் தெரியாது! (அக்டோபர் இரண்டுக்கு முன்பு) அவன் அருகே சென்றால், வாந்தி எடுக்க வேண்டும் — சாராயநாற்றம் அவ்விதம் அடிக்கும் — எனினும், அவனிடம் சென்று, ஆடவரும்பெண்டிரும் முதியவரும் குழந்தையுமாக நின்று, மயக்கம்போக, பேய்ஓட, வேப்பிலை அடிக்கச்சொல்லி, விபூதி தடவச்சொல்லி, வேண்டிக்கொண்டு நிற்பதைக்காண்கிறோமே. டாக்டரின் மனைவி, கலெக்டரின் தாயார், என்ஜினியரின் மகள், புரபசரின் அக்கா, இப்படி, இருப்பார்களே இந்த மூடநம்பிக்கைக்கு இரையாகிறவர்கள்.

✲

கீதாபோதனை, உபநிஷத்தின்உட்பொருள் உரைப்போன், சிவஞானபோதசாரத்தை உபன்யாசிப்போன், என்பவர்கள்போன்ற, சொல்லடுக்குக்காரர்கள்மட்டுமல்லவே, இந்த நாளிலும், செல்வாக்குடன் இருப்பவர்கள், மாயாவாதி மந்திரவாதி, அனுமத் உபாசி, அஞ்சனம் தருவோன், பில்லி சூனியம்தெரிந்தோன் முடிக்கயிறு தருவோன், முதலிய மிக மிக மட்டரகங்களும்கூட அல்லவா, மக்களிடம் செல்வாக்குடன் இருந்திடக்காண்கிறோம். ஆதிக்கம் செலுத்துகிறார்களே, அறிவால் அல்ல, பாமரரின் அறிவீனத்தைக் கண்டறிந்துகொண்டதால்.

✲

சீமான் சோமசுந்தரம், திறமையான வியாபாரக்கோமான் — அவர் தன்காலத்திலே, தகப்பனார் தனக்கென வைத்துவிட்டுப்போன ஓட்டு வீட்டை, மாடியாக்கினார், இரட்டை வண்டி இருந்த இடத்தில் மோட்டாரை நிறுத்திக்காட்டினார்—இருந்ததும், அதோ அவர், அழைத்துச் செல்கிறார், பாருங்கள், ஒரு காவிகட்டியை, பக்தியுடன்! எதற்கு? புதிய கிடங்கிலே, அந்த ஆண்டி, முதன் முதலாகக் கால் வைத்தால், புண்யம் அதிர்ஷ்டம், என்பது, சோமசுந்தரத்தின் நம்பிக்கை! கிடங்கிலே, ஆண்டி கால் வைத்ததும், சோமசுந்தரம், ஆண்டியின் காலிலே,வீழ்ந்து வணங்குவார்! ஏன்? அவர் அருள்தான், தனக்குச் செல்வம் தந்ததாக நம்புகிறார்.

இப்படி, மாளிகைவாசிகளில், பலபேருக்கு, 'மகிமை' உள்ளவர்கள், துணையாக இன்றும், இருந்திடும், நிலைதானே, நம்நாட்டிலே இருக்கிறது.

✲

இன்றும், ஏழுமலையானை, வேண்டிக்கொண்டு வீதியில் புரள்வோன், உடலைவாட்டிக்கொண்டு கடவுள் அருளைத் தேடுவோன், காட்டுமிராண்டிக்காரியம் செய்துவிட்டு, கடவுளின்மேல் பாரத்தைப்போடுவோன், என்போர்கள் இருக்கத்தான் காண்கிறோம்; இது அல்ல மதம், என்று கூறினாலோ, பாமரர் கோபிப்பர், இது அல்ல அறிவு என்றால், எதிர்ப்பர்! இந்நிலையில் நாடு இருந்திடக்காண்கிறோம். இல்லையென்றும் சர். ராதாகிருஷ்ணன் கூறமுடியாது; இவைகள் மதத்தின் மாண்புகள் என்றும் வாதிடத் துணியமாட்டார்!

✲

தக்கபருவமும், மனத்தெளிவும் ஏற்பட்டபிறகு, தாங்களாகவே, துணைவரைத்தேடிக்கொள்வதுதான் அறிவுடைமை, என்றபேச்சு, பட்டிமன்றங்களிலே! நல்லஇடம்! நல்ல சொத்து! ஒரேபெண்! கொஞ்சம் கருப்பு! சிறுவயதிலே, அம்மை வந்ததால், ஒருகண்ணில் பூபட்டுவிட்டதாம்! அதுதவிர, வேறு குறைகிடையாது. ரங்கோனிலிருந்து, வாடகை மட்டும் மாதம் மூவாயிரம்வருகிறது!—என்ற பேச்சு வீட்டிலே! விதவைகளின் கண்ணீரால்தான் இந்நாடு, கேவலமான நிலைக்கு வந்தது—என்ற உருக்கமான பேச்சு மாநாடுகளில். என்ன செய்வது, அவள்எழுத்து போடி அம்மா, உள்ளேபோ. பொழுதுசாயும் நேரம் —தெருவில் நிற்காதே! கண்டதும் கடியதும்வீதியிலே, வந்துதொலைக்கும். போய்ப் பாகவதம்,படி—என்ற பேச்சு வீட்டிலே.

பல்வலியினாலேதான், தலைவலி! பல்லில் பூச்சி இருக்கிறது-பல்லை எடுத்துவிட்டால், புண்இராது — உடனே தலைவலியும் போய்விடும்--என்ற பேச்சு டாக்டர் விடுதியில்,

அப்போதே சொன்னேன், கேட்கவில்லை--இன்று கிருத்திகை -- கிருத்திகையன்று, மாம்பழம் சாப்பிடக்கூடாது, தோஷம் என்று சொன்

னேன்—கேட்கவில்லை; சாப்பிட்டான்; அன்றிலிருந்து, வாயிலே, புண்ணாகி, பண்டைக் குடைச்சல் ஏற்பட்டு, மகன் துடியாய்த் துடிக்கிறான் — திருப்போரூர் முருகன் கோயிலுக்கு மூன்று கிருத்திகை சென்று, மாவிளக்கு போட்டால் தான், தோஷம்போகும் — என்ற பேச்சு வீட்டில்.

கடவுள் என்றால் என்ன? உருவமா! அல்ல! உணர்ச்சி!உள்ளொளி ஆதிகாரணம்! மூலகாரணம்! என்ற பேச்சு பெருமன்றத்தில்.

காத்தான்பூஜையும் காளிக்கு விழாவும், நாட்டில்—நானாவிதமாக! தத்துவார்த்தம் கூறுவது, படித்தோர்மத்தியில். நாதன் தட்டும் தாளத்துக்கு ஏற்றபடி தாண்டவமாடுவது வீதியில்.

இந்நிலையில்தானே நாடு இன்றும் இருக்கிறது. இல்லை என்று மறுத்திடவோ இருந்தால்என்னஎன்று கேட்டிடவோ, ராதாகிருஷ்ணன் துணிய முடியாதே.

பாமரர்போக்கு, படித்தவர் நிலைமை, பக்தர்களின் நடவடிக்கை, ஆட்சியாளர்களின் மனப்போக்கு, முதலிய எதைப்பற்றித்தான், பெருமைப்படக்கூடியதாக இருக்கிறது.

அரண்மனைகளிலே கோலாகலக் காட்சிகளும், பொதுமக்களிடம் வாழ்க்கைச்சிக்கலால் ஏற்படும் புலம்பலும் இருந்திடக்காண்கிறோம்.

ஆலைகளில், இலாபக் கணக்குகாட்டும் ஏடுகள் உள்ளன, பாட்டாளிகளின் உடலிலே, பசிக்கொடுமையை எதிர்த்து உரிமைப்போர் நடத்திய போது, அடக்குமுறை தந்த தழும்புகள் இருந்திடக்காண்கிறோம்.

வயலிலே புயல்! அதைஎதிர்த்து நிற்கமுடியாத நிலைகுலையும் கிராமீயப்பிரபுக்கள்!

பட்டிணங்களிலே, பவனி வரும் பணம் படைத்தோர் — பட்டிக்காடுகளிலே, பட்டினிப்பட்டாளம், எதற்கும் தயார் என்ற நிலையிலே இருக்கிறது.

தேர் திருவிழாவுக்குக் குறைவு இல்லை—தேவாலயபூஜைகளுக்கு ஓய்வில்லை — என்னப்பன் திருமலையானுக்கு உள்ள திருவாபரணத்தின் மதிப்பு, ஒருகோடிரூபாய் என்று கணக்கு தரப்படுகிறது.

பாரிஸ்பட்டிணம் சென்று பிரம்மஞான சங்கத்தலைமைப்பீடத்து அம்மையார், ருக்மணி அருண்டேல் அழகு நடனம் ஆடி, அதனைப் பல நாட்டுப்பிரமுகர்களும் கண்டு, அம்மையின் இடை நெளிவு, கண் சுழலும் காட்சி, கலைச்செறிவு ஆகியவற்றினை ரசித்திடுவதாகச் செய்தி வருகிறது.

வேலை இல்லை — சோறு இல்லை— வாழவோ வழியில்லை—எனவே தற்கொலை செய்துகொள்கிறேன், என்று எழுதப்பட்ட கடிதத்தை மடியில் வைத்துக்கொண்டு, மரக்கிளையிலே பிணமாக, ஏழை தொங்க, வழக்கத்துக்குமாறான காட்சியைக்கண்டு,பட்சிகள் பதைக்க, ஊரார்காண நேரிடும்போது, ஏழ்மையின் கொடுமை,வாழ்வின் நிலையாமை ஆகியவைபற்றி, பேசிடும் நிலை இருந்திடக் காண்கிறோம்.

இலாபம் குறைகிறது — என்று குறைப்படும் முதலாளி, ஒருபுறம்.

கூலிபோதவில்லை என்று குமுறும் பாட்டாளி, மற்றோர் புறம்.

சரக்கு விற்பனையாகவில்லை என்று ஏக்கமுறும் வியாபாரி ஓர்புறம்.

பண்டம் வாங்கப் பணமில்லை என்று பதைக்கும் பொது மக்கள் மற்றோர் புறம்.

இந்த நிலையிலே நாடு, இன்று இருக்கிறது.

ஆட்சியாளர்களைப்பார்த்தாலோ, பஞ்சமும், நோயும், வேலையில்லாக் கொடுமையும் அறியாமையும், மூடநம்பிக்கையும் குருட்டுப்போக்கும் கொண்ட நாட்டில் கோலோச்சுபவர்களாகத்தோன்றுமா? துளியும்தோன்றாது! பத்திரிகையைப் பாருங்கள்! ஸ்டாலின் நேருவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதும், ராஜாஜி ஆப்பிரிக்க விடுதலைப் போர்த்தலைவரை உபசரிப்பதும், அமெரிக்காவிலிருந்து நேருவுக்கு அழைப்பு வருவதும், பர்மியசர்க்கார் உதவி கேட்பதும், பலஸ்தீன் பிரச்னைக்கு பரிகாரம் கூறப்படுவதும், ஆசியமாநாடு நடப்பதும், போர்ப்பாண்டவரிடம் பேசுவதுமாக, இப்படி, கேட்டதும் பூரிப்பும் பெருமையும், அடையக் கூடியவிதமாக செய்திகள் வருகின்றன.

பட்டாளத்தைப் பாருங்கள் — அடிக்கடி படம் வருகிறதே, பவனி, அணிவகுப்பு என்று; எப்படித்தெரிகிறது? வளமும் வல்லமையும் கொண்ட ஒருநாட்டுக்கு சிறப்பளிக்கும், விதமாகத்தான், பட்டாளம் தெரிகிறது. அதற்காகும் செலவுக்கணக்கைக் கவனியுங்கள்—அடுத்த நாள் பெரும்போருக்கு ஆயுத்தம் செய்யும் நிலையில் உள்ள நாட்டுக்கு ஏற்படக்கூடிய செலவுபோலிருக்கும்.

மதம்—மக்கள்நிலை—சீமான்களின் போக்கு—ஆட்சியாளர் தன்மை — குருமார்களின் கொட்டம் — முதலிய எதைக்கவனித்தாலும், ஜார் காலத்து நிலைமை, இங்கு, தென்படத்தானே செய்கிறது.

மக்களை மடமையில் ஆழ்த்தி வைக்கும் மதத்தைத்தானே, நாம் கொண்டிருக்கிறோம்.

மன்னர்களையும் ஆட்டிப்படைக்கும் சாமியாடிகளிடம்தானே, மதம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

எந்தவிதத்திலே, இன்று நம்நாட்டிலே உள்ள மதம், ஜார்காலத்து மதத்தைவிட, நல்லதாக இருக்கிறது என்று சர். இராதாகிருஷ்ணன் விளக்குவாரா! முடியாது!!

அழிக்கப்படவேண்டிய அளவுக்குக் கெட்டுக் கிடந்தது, கேடு செய்தது, ஜார்காலத்து மதம், என்று கூறினாரே, இப்போது, இங்குள்ள மதத்தை என்ன செய்வது? இதன் இலட்சணம் என்ன? இந்த ஆராய்ச்சியும், இதற்கான பதிலும்தான், இந்த நாட்டை வாழவைக்க, வழி செய்யப்போகிறது! மாஸ்கோ, போகிறார் ராதாகிருஷ்ணன்-காசி, காஞ்சி, கயா, பிரயாக்,போன்ற புண்யக்ஷேத்திரங்கள் நிறைந்த நாட்டிலிருந்து. ஏதோ, அந்த நாட்டிலே, மதம்,நாசமாக்கப்படவேண்டிய அளவுக்குக் கெட்டுக்கிடந்ததாலேயே, மதம் நிர்மூலமாக்கப்பட்டதாகவும், இங்கே, மதம், மக்களை ஒழுக்கசீலர்களாய், மனத்திருப்தி கொண்டவர்களாய், மனிதர்களாய், வைத்திருப்பதுபோலவும், பசப்பவேண்டாம் என்று பணிவன்புடன் கூறுகிறோம். ஜாரின் காலத்துக்கும், இன்று இங்கு இருப்பதற்கும், அதிகவித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை, என்று கிருபாளனி, சின்னாட்களுக்குமுன் ஓர் கட்டுரையில் குறிப்பிட்டார். நிலைமை அதுதான்! ஜார்காலத்துமுடைநாற்றம் அடிக்கத்தான் செய்கிறது — மாஸ்கோ மணம் பரவித்தானே தீரும். ராதாகிருஷ்ணன் போன்றாரின், பசப்புரை, அதைத் தடுத்துவிடவா முடியும்—முடியாது!

—*—

# மாஜி கடவுள்கள்

C. N. A.

தலைப்பைக் கண்டே, சீறிச் சபித்திடவேண்டும் என்ற எண்ணம் பிறக்கும், ஆத்தீகத்தின் பாதுகாவலர் தாமே, என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்கு.

"ஆதி அந்தமில்லாத கடவுளையா, 'மாஜி" என்று கூறுகிறாய்; மதியீனனே! மந்திரியா, ராஜதந்திரியா, மன்னனா சீமானா, மகேசனாயிற்றே! மன்னன் மாஜியாவதுண்டு, மந்திரி மாஜியாவதுண்டு, கடவுளை 'மாஜி' என்கிறாயே மமதையாளனே! இந்தப் பாபம் உன்னைச் சும்மாவிடுமா, என்று சுடுசொல் பல கூற எண்ணுவர், நாம் ஏதோ நாத்தீகம் பேசுகிறோம் என்ற எண்ணம் கொண்டு.

தலைப்பை மீண்டும், பார்க்கும்படி, கருத்துடன் கவனித்துப் பார்க்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

'மாஜி கடவுள்' அல்ல, தலைப்பு; மாஜி கடவுள்கள்!! என்பது தலைப்பு; புரிகிறதா உண்மை?

பல கடவுள்களை, பூஜித்துக் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது, எல்லா இடத்திலும்.

தந்தைச்சாமி, தாய்ச்சாமி, தாய்ச்சாமிக்கு ஒரு சக்களத்திச்சாமி, பிள்ளைச்சாமி, பெண்சாமி, என இவ்வண்ணம், பல தெய்வ வழிபாடு இருந்து வந்தது—அறிவுத் தெளிவு இல்லாதிருந்தபோது—உலகில் பல நாடுகளில்.

ஒருவனே தேவன்!-என்ற அடிப்படை உண்மையும், ஒழுக்கமுமே மதம் என்ற உன்னதக் கோட்பாடும், அறிவுத்துறையிலே, அரியாசனம் ஏறுவதற்கு முன்பு, பல தெய்வவழிபாடுதான், அங்கெல்லாம் இருந்து வந்தது.

பகலுக்கு ஒரு தெய்வம், இரவுக்கு இன்னொன்று! பஞ்சம் தரும் தேவதை ஒன்று, அதைப் போக்கும் தெய்வம் மற்றொன்று; படைகலக்கும் தெய்வமொன்று இடிமுழக்கும் தெய்வம் ஒன்று, என்ற விதமாக, எண்ணற்ற கடவுட் கூட்டத்தை, மக்கள் கும்பிட்டு வந்தனர்-பல்வேறு நாடுகளில்.

மனமாசு நீக்கக்கூடிய பகுத்தறிவுக் கதிர் தோன்றிய பிறகு, பல தெய்வ வழிபாடு என்பது, உண்மையான ஆத்தீகமாகாது-மதமாகாது-அருள் பெறும் வழியாகாது—மனமருள்கொண்ட மக்களை, சூதுமதி மிகுந்த பூஜாரிக் கூட்டம், பிடித்தாட்டவே, கட்டிவிடப்பட்ட, கற்பனை இது, என்ற எண்ணம் வெற்றி பெற்றது; அந்த வெற்றியின் காரணமாக, பல கடவுள்கள், மாஜிகளாயினர்!

அந்த மாஜி கடவுள்களையே, நாம், மதத்தின் மாசுபோக்கும் செயலைக்கூட, நாத்தீகமோ, என்று மருட்சியுடன்எண்ணும் மக்களுக்கு அறிமுகப்படுத்திவைக்க, தொடங்கியிருக்கிறோம்.

இந்த மாஜி கடவுள்கள், ஒரு காலத்தில், விண்ணை முட்டும் கோபுரங்கள் கொண்ட கோயில்களிலே கொலு வீற்றிருந்தனர்.— பூஜாரிக் கூட்டம் புடை சூழ, பக்தர் குழாம் பாதம் தொழ, பாவலரும் நாவலரும் பக்திப் பாசுரங்கள் பலப்பல கூறிட, நாடாள்வோன் நவநிதியும் காணிக்கையாகத் தர, கோலோச்சி வந்ததுண்டு.

இந்த மாஜி கடவுள்களின், அருமை பெருமை, அருள்தரும் திறமை, ஆற்றல் ஆகியவை பற்றி பெரிய புராணங்களைத் தீட்டித் தந்தனர், அருட்கவிகள், என்று பாமரரால் புகழப்பட்ட கவிவாணர்கள்.

எனினும், இன்று அவை எலாம், மாஜி கடவுள்களே!!

கொட்டு முழக்கு கேட்கும் கோயிலிலே, அல்ல, இந்த மாஜி கடவுள்கள், இன்று இருப்பது — கண்காட்சிச் சாலைகளிலே!

பூஜாரிகள் மந்திர உச்சாடனம் செய்ய, பூமான்கள் காணிக்கை கொட்ட, பக்திமான்கள் பரவசப்பட, அல்ல, இந்த உருவங்கள், இன்று இருப்பது.

ஆராய்ச்சியாளர்கள், படம் பிடிக்க, சரித்திரக்காரர்கள் சம்பவங்களைத் தொகுக்க, மாணவர்கள் காலத்தையும் கருத்தையும் ஒப்பிட்டுப்படிக்க உதவும் உருவங்களாகிவிட்டன.

எங்கெந்த நாடுகளிலே, ஏத்தி ஏத்தித் தொழப்பட்டு வந்தனவோ, அங்கெல்லாம் இன்று ஏக தெய்வக் கொள்கை அரசு செலுத்துவதால், இந்த யாஜி கடவுள்கள் ஒருகாலத்துக் கற்பனைகள், பழங்காலத்து நினைவுகள், பூஜாரியின் கருவிகள், என்றாகிவிட்டன. பகுத்தறிவாளர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும், பாமரர்களுக்கும் தெளிவு பிறக்கும் வண்ணம், நல்லறிவு அந்த நாடெல்லாம், பரப்பப்பட்டுவிட்டது. நானாவிதமான உருவங்களுடன், நாட்டு மக்களையும் நாடாள்வோரையும், மருட்டிக் கொண்டிருந்த உருவங்கள், இன்று மாஜி கடவுள்களாகி விட்டன.

அந்த மாஜி கடவுள்களிலே, இந்த இதழில், காணப்படுவது, ஜூவஸ் -பெருந் தெய்வம் - மூலத்தெய்வம்!

இந்த மாஜி கடவுளின், சக்தியைப் பற்றிய கதைகளை, இன்று, அறிவுள்ளோர் அனைவரும், பூஜாரியும் புலவனும் சேர்த்துத் தயாரித்த சரடுகள் என்று, கூறுகின்றனர்—ஆனால், மாஜியாகா முன்பு, ஜூவசுக்கு இருந்துவந்த மதிப்பும் செல்வாக்கும், அளவிட முடியாது! புராணங்கள் பலப்பல! பூஜைகள் பலவிதம்!

ஜூவஸ், கிரேக்கர்கள், பூஜித்து வந்த, பெருந்தேவன் — தேவர்க்கரசன்—தேஜோன்மயமானவன்!

ரோம்நாட்டவர், இதே கடவுளை, ஜூபிட்டர், என்ற பெயரால்பூஜித்தனர்.

ஜூவசின், "திருக்கல்யாண" குணத்தைக் கொண்டாடிப் பாமரர்,

# மனிதத் தன்மைக்கே முரண்பாடு

சூட்ட, அந்த நாட்டில் 'கம்பன்'இல்லாமல் இல்லை!

*  *  *

கருத்தெலாம் அறியும்
 கண்ணன்
பாரெலாம் பார்த்திருந்தான்!
பத்தரை மாற்றுத்தங்கம்,
பகவான் வீற்றிருந்த பீடம்.
என்னகாண் அவன்தன்ஆற்றல்
என்றுள இடியோன்அவனே.
தேவர்தம் உலகைத்தானே
தன் திருப்பாதம் தாங்கும்,
ஆசனமாகக் கோண்டான்
அருந்திறன் உடையோன்,
 கண்டாய்.
அவனுரை கேட்ட அண்டம்
அதிர்ந்திடும் அச்சம்கோண்டே
அவன்சிரம் அசையக்கண்டு
தேவரும் பெறுவர் திட்டம்.
விதி எனும் கோலும் ஆடும்
வினை எலாம் ஓடும் அவன்முன்
ஆண்டவன் அவன்முன்
 அண்டம்
அதிர்ந்திடும் அச்சம்கோண்டே!

*  *  *

இக்கருத்துப்பட, திருப்புகழ் பாடினவர், சாமான்யக் கவிராயர் அல்ல — Homer — உலக மகாகவிகளில் ஒருவர் என்று, எவரும் வியந்து கூறும், ஹோமர்!

இந்தத்திருப்புகழ், இன்று, கவியின் கற்பனைத் திறத்துக்கும், கவிதையின் சிறப்புக்கும், எடுத்துக்காட்டாக இருக்கிறதேயன்றி, ஜூவசின்பால், பக்தி செலுத்தும்படி, மக்களைத் தூண்டும், சக்தி பெறவில்லை!

மனக்கண்முன், சித்தரித்துப் பாருங்கள்!

பிரம்மாண்டமான ஆலயம்! ஆஜானுபாகுவான உருவமாக, ஜூவஸ், தேவன் சிலைஉருவில், இருக்கிறார். மணிமாடங்கள்! மண்டபங்கள்! திருக்குளங்கள்! பூம்பொழில்கள்! மதில்கள்! பிரகாரங்கள்! மடைப்பள்ளிகள்! எல்லாம், செல்வத்தின் சிறப்பைவிளக்குவனபோல் உள்ளன. பட்டத்தரசன், அவன் மனதைத் தொட்டுவென்ற அழகி, படைத்தலைவன், பொருள் காப்போன், வணிகவேந்தன், கலைவாணன், எனும் பலரும், தொழுது நிற்கிறார்கள், ஜூவஸ் முன்பு.

எதிரே, நெரித்தபுருவமும், மேல் நோக்கிய கண்களுடனும், நின்றுகொண்டிருக்கிறான், பூஜாரி. அவன் முன், காணிக்கைப் பொருள்கள் குவிந்திருக்கின்றன!

இங்கு இன்றும், கேட்கப்படும், சஹஸ்ரநாமம்—அர்ச்சனை— கிடையாதுபோலும், என்று எண்ண வேண்டாம்! ஜூவசின், திருவிளையாடல் புராணத்தைப் பார்த்தால்,யூகித்துக்கொள்ளலாம், அன்று, அந்தப் பூஜாரிகள், என்னவென்ன கூறி, அர்ச்சித்திருப்பார்கள் என்பதை.

உற்றுக்கேளுங்கள், அவன் அர்ச்சிப்பதும் கேட்கும், அதுகேட்டு,பக்தர் குழாம், நெஞ்சு நெகிழ நிற்பதும் தெரியும், மனக்கண்ணுக்கு.

*  *  *

ஜேகமதைப் படைத்தாய்
 போற்றி!
தேவனே! ஜூவஸ்! போற்றி!
அமரர்தம் முதல்வா போற்றி!
அவுணரை அழித்தாய்போற்றி!
தீரனே, போற்றி, போற்றி!
திருஅருள் தாராய், போற்றி!
இடிப்படை கோண்டாய்
 போற்றி!
இகபர அரசே போறறி!
மழைதனைப் பொழிவாய்
 போற்றி!
மாபுயல் விடுவோய் போற்றி!
மேக சம்ஹாரா போற்றி!
மேதினி காப்போய் போற்றி.

*  *  *

அர்ச்சனை, இதுபோன்றுதான் இருந்திருக்கவேண்டும்—ஏனெனில் இப்படிப்பட்ட வல்லமைகள் கொண்டகடவுளாகவே,ஜூவஸ்,சித்தரிக்கப்பட்டு, அக்கால மக்களால், பக்தி விசுவாசத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டு, வந்தார். இது மட்டுமா அர்ச்சனை? விபரீதமான, கடவுட் தன்மைக்கு மட்டுமல்ல; சாமான்யமான மனிதத்தன்மைக்கே கூட முரண்பட்டதான, கேடுபயப்பதான, செயல்களையே, சிறப்புக்களாக் கிக்காட்டும், அர்ச்சனைகளும்உண்டு.

*  *  *

தந்தையை வென்றாய் போற்றி!
தங்கை மணாளா போற்றி!!

என்று பூஜாரி, அர்ச்சித்திருப்பார்! ஏனெனில்ஜூவசின், திருவிளையாடற் புராணத்திலே, அவர் தன் தந்தையுடன் போரிட்டு வென்றதும், தங்கையைத் தாரமாக்கிக் கொண்டதும் சிறப்பாக, விளக்கப்பட்டிருக்கிறது! எனவேதான்,இன்று முருகனை வழிபடுபவர்கள் துதிக்கவில்லையா, தந்தைக்குபதேசம் செய்தவா, போற்றி போற்றி, தத்தை மொழி குறமகளை மணந்தவா போற்றி, போற்றி,என்று அதுபோல, அன்று ஜூவசை, அந்நாட்டுப் பூஜாரிகள் அர்ச்சித்திருக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

அந்த அர்ச்சனைகள் எல்லாம் இன்று, ஆடிடும் சிறுரும் கேட்டு, ஆம்என்றுஏற்கமுடியாத, கேலியுரைகளாகிவிட்டன.

அந்த அர்ச்சனைகளில் வல்லவர்களான, பூஜாரிகள், யாரும் இன்று கிடையாது கிரீசில்!

அந்த ஆலயங்களே இன்று அங்கு, கிடையாது!!

ஆலயங்களென்ன, அந்த ஆண்டவனே, இன்று அங்கு கிடையாது! ஜூவஸ் ஒரு மாஜி கடவுள்!!

வெள்ளைநிறப் புரவிகள் நான்கு, தேரில் பூட்டப்பட்டிருக்கும்.
செயல்திறம் கொண்ட உருவும் அமைந்தவராக இருப்பார்

வெண்ணிறத் தலையணி பூண்ட பூஜாரிகள், அவர் சேவைக்கு இருப்பர்.

வெண்ணிற மிருகங்களையே, அவருக்குப் பலி தருவார்கள். ஜூபிடர், என்ற பெயருடன், ரோம் நாட்டவர், இதே தேவனைப் பூஜித்து வந்தனர்! அங்கும், இன்று, ஜூபிடர் ஓர் மாஜி கடவுள்தான்!

# தாயைத் தாரமாக்கிய தயாபரன்

பூமாலையோ பாமாலையோ சூட்டிடுவார், யாரும் இல்லை—கோயில் இல்லை—கோலாகல உற்சவம் இல்லை—ஜூபிடரும் ஜூவஸ் போலவே, மறைந்து போனார், மக்கள் மனதிலிருந்து, மார்க்கத் துறையிலிருந்து. மாஜிகளாயினர், மக்களின் மதி துலங்கிய பிறகு!!

மான் மழுவேந்தி, புலித்தோலாடை பூண்டு, இமயத்தில் வீற்றிருக்கும், முக்கண்ணனைத் தொழுது மகிழும், "பேறு" பெற்ற புராணீக மதத்தவர், நம்மிடை அனேகர் உண்டு.

ஜூவசின், சிறப்பும், அது போலவே, போற்றப்பட்டு வந்தது, கிரேக்கர்களால்.

ஒலிம்பஸ், எனும் உயரமானதோர் மலைமீதுதான் ஜூவஸ் கொலுவீற்றிருந்ததாகக் கதை. கரத்திலே, வெற்றிதரும் படைக் கருவி! கெம்பீரமான தோற்றம்! நீண்டு, சுருண்டு வளர்ந்த, கேசம்! ஆட்டுத் தோலாடை அணிவார் சிலசமயம்! சில வேளைகளில், பட்டாடை மேனியை அழகு செய்து, கீழேயும் புரளும்! சிவனாருக்கருகே, ரிஷபம், நந்தி, இருக்குமாமே! ஜூவசின் அருகே எப்போதும், கழுகு இருக்குமாம்!!

கோலம் இதுபோல்—குணாதிசயத்தை விளக்கும் செயல்கள், பல உண்டு. அவைகளை நம்புவதுதான் ஆத்திகம், சந்தேகிப்பது, நாத்திகம், என்றுதான் பொதுவிதி இருந்தது; அந்நாளில், அங்கு!

இப்படி எல்லாமா நடந்திருக்கும்? என்று கேட்பவன், பாபி! இபபடி எல்லாம், செய்வதா, கடவுட் தன்மைக்கு அழகு? என்று கேட்பவன், நாத்திகன்! அவன சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவான்! அவனை இம்சிப்பது, "தேவப்பிரீதியான காரியம்."

ஆதி அந்தமற்ற தன்மைதானே, இன்றைய ஆத்திகம். அன்றைய ஆத்திகம், அவ்விதம் இல்லை. ஜூவஸ் தேவனுக்கு, தகப்பனார் தாயார் உண்டு, பாட்டன்பாட்டியும் உண்டு; அவர்களுக்குள், பகை, போர், மூண்டதுமுண்டு. கடவுள்களா, இப்படிச் செய்திருக்க முடியும், காட்டுமிராண்டி ஜாதியிலே நடைபெறும் செயல் போலிருக்கின்றதே என்று கூறத் தோன்றும். ஆனால் அந்தக் காலத்திலே, கூறியிருந்தால், கூறினவனின் நா அறுக்கப்பட்டிருக்கும்—அந்தநாள் ஆத்திகம், அந்தக் கதைகளை நம்பும்படி, வலியுறுத்திற்று.

கேளுங்கள், ஜூவஸ், தேவனின் பிறப்பு வளர்ப்பை! கடவுள், பிறக்கிறார், அது ஆத்திகம்!!

உலகம் தோன்றா முன்பு எல்லாம் இருள்மயமாக இருந்தபோது, குழப்பம் எனும் தேவனும் இருளி எனும் தேவியும் மட்டும் இருந்தனர்-தெளிவான உருவுடன் அல்ல.

அப்படியானால், எப்படி அவர்கள் தெரிந்திருக்க முடியும்? என்ற கேள்வி, கிளம்பும், உடனே. கேட்பது, நாத்திகம்!!

குழப்பமெனும் தேவனும் இருளி எனும் தேவியும் இருந்தபோது, விண்ணோ மண்ணோ கடலோ, கிடையாது என்று கூறுகிறாயே, அது உண்மையானால், அவர்களைக் காண, யார் இருந்தனர், என்று கேட்கத் தோன்றும், ஆனால் கேட்கக்கூடாது, அந்நாளில். கேட்பது, நாத்திகம்!!

இப்படியும் ஒரு பைத்தியம் இருந்ததா, என்று கேட்பீர்கள். இதில் என்ன அதிசயம்? விமானம் பறக்கும் இந்த விஞ்ஞான காலத்திலேயும், நமது நாட்டிலே, ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷனைக் கண்டது யார், தலைகளை எண்ணிக் கணக்கெடுத்தது யார், ஆதிசேஷன்தான், அண்டத்தைத் தாங்கிக்கொண்டு, கீழே இருப்பதாகக் கூறுகிறாயே, அண்டத்திலே இருப்பவர்கள் அதை எப்படிப் பார்த்திடமுடியும், என்று கேட்டுப்பாருங்களேன், மதவாதிகளை ஆத்திகர்களை, - என்ன கோபம் வருகிறது பாருங்கள்—நாத்திகன் என்று எவ்வளவு ஆத்திரத்துடன் கூறுகிறார்கள், பாருங்கள்.

இன்று இங்கு நிலைமை இவ்விதம் இருக்கும்போது, அந்த நாட்களில், கிரேக்க நாட்டு ஆத்திகர்கள, அவ்விதம் இருந்ததிலே, ஆச்சரியமா கொள்கிறீர்கள். அதைப் பித்தம் என்று கூறினால், இன்னும்இங்குள்ள விசித்திர சித்தர்களின் போக்கை என்னவென்று சொல்வீர்கள்.

மனிதர்கள் கதை கிடக்கட்டும்—கடவுள்களின் கதையைக் கவனிப்போம்.

குழப்ப தேவனும் இருளித் தேவியும், நீண்டகாலத்துக்குப் பிறகு, சலிப்பேற்பட்டு, தங்கள் அலுவலுக்கு உதவியாக இரிபஸ் எனும், மகனை அழைத்தார்கள்.

மகன் செய்த, மகத்தான முதற் காரியம் என்ன தெரியுமோ? தந்தையை ஆட்சிப்பீடத்திலிருந்து விரட்டுவதுதான்! விபரீதமாக இருக்கிறதே என்பீர்கள்—இதற்கே பதறுதீர்கள்—மேலும் உண்டு, விபரீதம். தந்தையை விரட்டிய எரிபஸ், தனிமையை விரும்பவில்லை! தாரம் தேவைப்பட்டது. என்னசெய்தான்? தாயையே தாரமாக்கிக்கொண்டான்!

மகனை மணாளனாகப் பெற்ற மாதாவும், அவன் மனம் கோணாமல் நடந்துகொண்டதுடன், ஈதர், எமிரா எனும் இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

இந்த இரு மக்களும், தம் பெற்றோரை விரட்டிவிட்டு, ஆட்சிப் பீடமேறினர். எராஸ் எனும் மகவு பிறந்தது. மூவருமாகச் சேர்ந்து, கடல், பூமி, இரண்டையும், படைத்தனர்.

பூமி, பசுமையற்று, ஜீவனற்று இருந்தது, ஆதியில். எராஸ், தன் அதிசய அம்பை எய்தான்! செடியும் கொடியும் முளைத்தன! பட்சி வகைகள், பறந்தன! மீன்கள், குளங்களில் உலவின. மிருகங்கள், கானகங்களிலே உலவின; எங்கும் மகிழ்ச்சி—மலர்ச்சி!

பூமி—ஒரு தேவி! இந்த அம்பு விட்டு அற்புதம் நிகழ்த்திய பிறகு, அந்த அணங்கு, துயிலெழுந்து, தன்னைச் சுற்றிலுமுள்ள சோபிதம் கண்டு, ரசித்து, காதலுள்ளம் கொண்டு, யூரானஸ் எனும் தேவனைச் சிருஷ்டித்தாள் — மணம் முடிந்தது இருவருக்கும்.

பூமாதேவிக்கு, கியா எனப்பெயர்—மணாளன் பெயர் யூரானஸ்! கியா பூமி; யூரானஸ், விண்ணுலகு! விண்ணுக்கும் மண்ணுக்கும் திருமணம்!

இந்தத் தம்பதிகளுக்கு, பலசாலிகளான 12 மக்கள்பிறந்தனர்—இவர்

# அறிவு ஒத்துழைக்க மறுக்கிறது, இங்கே!

களுடைய ஆற்றலைக்கண்டு, யூரானஸ், அஞ்சினான். இந்தப்பிள்ளைகள் வளர்ந்தால், தமது ஆற்றலால் தன்னை அழித்துவிடுவர், என்ற அச்சம்கொண்டு, பன்னிருவரையும் பிடித்து, பாதாளத்திலே கொண்டு போய், இரும்புச் சங்கிலிகள் கொண்டு கட்டிவிட்டான்.

இந்தப் பன்னிருவரில், ஆறுபேர் ஆடவர், அறுவர், பெண்டிர். பாதாளச் சிறையிலிருந்து இந்தப் பிரமாண்டமான மக்கள், வெளிவர முடியாது, எனவே தனக்கு அழிவு கிடையாது, என்று அகமகிழ்ந்து யுரானஸ் இருந்தான்; மக்களைப் பெற்றமாதாவுக்கோ, தாங்கொணாத் துயரம்; கணவனுடன் வாதாடிப் பார்த்தாள்; பலன் இல்லை—எனவே அவளும், பாதாள லோகம் சென்றுவிட்டாள்; தன்மக்களைத் தூண்டினாள், தகப்பனைத் தாக்கச் சொல்லி.

பன்னிருவரில், கடைக்கோட்டி, குரோனஸ்—அவன் தான் ஆர்த்தெழுந்தான் அன்னை உரைகேட்டு—கோடரி தந்தாள் அன்னை—கொண்டு சென்றான், தந்தையைத் தோற்கடித்து, சிம்மாசனம் ஏறினான்—தந்தை, மகனைச் சபித்தான், நீயும் உன் மகனாலேயே, மாளக்கடவாய் என்று.

குரோனஸ், தன் உடன் பிறந்தாரைப் பாதாளச் சிறையிலிருந்து மீட்டான்—தன் தங்கை, ரியா என்பாளை மணம் புரிந்துகொண்டான். ஒலிம்பஸ் எனும் உயர்மலை மீது, வெற்றிகண்ட குரோனஸ், வீற்றிருந்தான்.

ஒரு நன்னாள், மகனொருவன் பிறந்த சேதி கேட்டான், குரோனஸ் உடனே தந்தையிட்ட சாபம் கவனத்திற்கு வந்தது—பதறினான்—தாரமான தங்கையிடம் சென்றான், தருக மகவை! என்று கேட்டான், அவளும் அகமகிழ்ச்சியுடன் தர, வாங்கினவன், அவள் கண்டு பதறும்படி, அதனைத் தன் வாயில் போட்டு, விழுங்கிவிட்டான்.

இப்படிப் பல குழந்தைகளை அவன் விழுங்கியபடி இருந்தான்—சாவைத் தடுத்துக்கொள்ள. மாதாவின் மனம் பற்றி எறிந்தது, ஒரு மகவையாவது, காப்பாற்றியே தீருவது என்று, தீர்மானித்தாள். ஜூவஸ் பிறந்தான். பிறந்ததும், குழந்தையைச் சில தேவகன்னியரிடம் கொடுத்து, இடா மலையில், எவருக்கும் தெரியாவண்ணம், வளர்த்துவர ஏற்பாடு செய்தாள். கொடு குழந்தையை! எனக் கொடியோன் கேட்டான். மன்றாடினாள் — அவன் பிடிவாதம் செய்தான்—எனவே, தந்திரமிக்க அவள், ஒரு பெருங்கல்லை, ஆடை போர்த்து, அவனிடம் தந்தாள். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டுதானே! அப்படியே, விழுங்கினான், தன்னைக் கொல்லப்பிறந்த குழந்தையை விழுங்கியதாகவே எண்ணி எக்களிப்பு கொண்டான். குழந்தையோ, தேவகுமாரிகள் சீராட்டிப் பாராட்டி வளர்க்க, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

இடாமலையில் ஒரு குகையில் இங்ஙனம் வளர்த்து வந்த, ஜூவசுக்குப் பால்தரும் பணியினை ஏற்றுக்கொண்டிருந்ததாம், ஒரு ஆடு—அதற்குப் பெயர், அமால்தியா என்பதாகும்—ஆண்டவனுக்குப் பாலூட்டியதற்காக அந்த ஆட்டுக்குப் பரமபதம் பிறகு கிட்டிற்றாம்.

கரி, நரி, பரி, கருங்குருவி, ஓணான், முதலியவற்றுக்கெல்லாம், பரமபதம் கிடைத்ததாக, நம்மிடம் புராணம் உண்டல்லவா? கிரேக்கப் புராணீகன் ஆட்டுக்கும் பரமபதம் அளித்தான், கதையில். இன்று, ஆடு அமரர் உலகு அடைந்த கதையைக் கூறினால், கிரேக்க நாட்டிலும், அறிவு முன்னேறியுள்ள எந்த நாட்டிலும் கைகொட்டித்தான் சிரிப்பார்கள். இங்கோ, ஓணான் முக்திபெற்ற கதையைக் கேலியாக, யாரேனும் பேசினால், ஓம்சாந்தி என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்யும் நல்லவரும் கூட, பாவீ! நாத்தீகா! என்று கோபிப்பார்! அறிவு இங்கு அந்த அளவுக்கு ஒத்துழையாமை செய்கிறது.

ஜூவசின் பாலபருவம் இப்படி, இருந்தது — தந்தை, அப்படி ஒரு குழந்தை இருப்பதாகவே, அறியாமலும், தாயின் பாசத்தைப் பெற முடியாமலும், தாதிமார் தயவால் வாழும் நிலை. ஓரளவுக்கு, நமது புராணங்களில், முருகன், வளர்ப்புக்குக் கார்த்திகைப் பெண்களைக் குறிப்பிடுவது போல!!

குழந்தை அழுதது, அந்தச் சத்தம், தந்தையின் காதிலே விழுந்தால் என்ன செய்வது என்பதற்காக, தந்திரமான ஓர் ஏற்பாடும் இருந்ததாம். பூஜாரிகள் பலர், கூவுவதும் கொக்கரிப்பதும், கூத்தாடுவதும், ஆயுதங்களைக் கொண்டு பேரொலி கிளப்புவதுமாக இருப்பராம். இந்த அமளிச் சத்தத்திலே அமிழ்ந்து போகுமாம், ஜூவசின் அழுகைச் சத்தம்!

குரோனஸ், குதூகலமாகவாழ்ந்து வருகையில், குழந்தை ஜூவஸ் வளர்ந்து வரும், செய்தி எட்டிற்று; அச்சமும் ஆத்திரமும் கொண்டான்; ஜூவசைக் கொல்லத் தீர்மானித்தான். ஆனால் தந்தை போர்க்கோலம் பூணு முன், தனயன் கிளம்பித் தாக்கினான். தகப்பன் தோற்கடிக்கப்பட்டான். வெற்றி பெற்ற ஜூவஸ், தந்தையின் அரியாசனத்தில் அமர்ந்து தாயின் மந்திராலோசனைப்படி ஆட்சி புரியலானான். குரோனஸ் விழுங்கிய குழந்தைகளை எல்லாம், மீண்டும் அவன் உள்ளிருந்து வெளியே, உயிருடன்கொண்டு வருவதற்காக, கடுவிஷமொன்றைத் தயாரித்து, குரோனசை பருகச் செய்தான் — உடனே, உள்ளே இருந்த, பாசிடன், ப்ளூட்டோ, ஹெஸ்ட்டியா, டெமீடர், ஹீரா, எனும் குழந்தைகள் யாவும், வெளியே வந்தன, உயிருடன். இவை மட்டுமா, குழந்தையென நம்பி விழுங்கிவிட்டானே, கல், அதுவுங்கூட வெளியே வந்து விட்டதாம். உடன் பிறந்தார்களை, தந்தையின் வயிறாகிய சவக்குழியிலிருந்து மீட்டான்.

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.